# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# Annual Performance Report

# 2018

ජාතික ඒකාබද්ධතා, රාජ්‍ය භාෂා, සමාජ ප්‍රගති සහ හින්දු ආගමික කටයුතු අමාත්‍යාංශය

தேசிய சகவாழ்வு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, மற்றும் இந்து சமய விவகார அமைச்சு

Ministry of National Integration, Official Languages, Social Progress and Hindu Religious Affairs

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2018

## தேசிய சகவாழ்வு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, மற்றும் இந்து சமய விவகார அமைச்சு

உள்ளடக்கம்

01. அறிமுகம்........5

02. தேசிய சகவாழ்வு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, மற்றும் இந்து சமய விவகார அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் அமைப்பு........9

03. தேசிய சகவாழ்வு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, மற்றும் இந்து சமய விவகார அமைச்சின் கீழ் உள்ள பிரிவுகள் மற்றும் அவற்றின் செயலாற்றுகைகள்........13

3.1. மொழி உரிமைகள் பிரிவு........15

3.2. சகவாழ்வு, கலந்துரையாடல்கள் பிரிவு........24

3.3. நிர்வாகப் பிரிவு........34

3.4. திட்டமிடல் பிரிவு........37

3.5. கணக்குப் பிரிவு........38

3.6. உள்ளக கணக்காய்வுப் பிரிவு........39

04. அரசகரும மொழிகள் திணைக்களம் மற்றும் அதன் முன்னேற்றம்........45

05. அரசகரும மொழிகள் ஆணைக்குழு மற்றும் அதன் முன்னேற்றம்........59

06. தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகம் மற்றும் அதன் முன்னேற்றம்........69

07. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம் மற்றும் அதன் முன்னேற்றம்........95

08.தேசிய ஒருமைப்பாட்டிற்கும், நல்லிணக்கத்திற்குமான அலுவலகம்........105

09. இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்........119

10. வரவு செலவு முன்னேற்றம்........125

11. நாணய ஒதுக்கீடு........129

12. முற்பணக் கணக்கு........131

13. விமர்சனம்........133

# 01. அறிமுகம்

இலக்கம் 1945/40 மற்றும் 2015.12.18 ஆம் திகதிய விஷேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சானது ஸ்தாபிக்கப்பட்டதுடன் அவ்வமைச்சு 2070/56 மற்றும் 2018/05/12 ஆம் திகதிய விஷேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக தேசிய சகவாழ்வு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சாக திருத்தம் செய்யப்பட்டுள்ளது. மீண்டும் இலக்கம் 2103/33மற்றும் 2018.12.28 ஆம் திகதிய விஷேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக பரந்த களம் மற்றும் 07 கொண்ட தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சாக ஸ்தாபிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

தேசிய சகவாழ்வு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, மற்றும் இந்து சமய விவகார அமைச்சராக கௌரவ மனோ கணேசன் அவர்களும் செயலாளராக திரு.எம்.வை.எஸ்.தேசப்பிரிய அவர்களும் கடமையாற்றுகின்றனர். இவ்வமைச்சு இல 40, புத்கமுவ வீதி, இராஜகிரிய எனும் முகவரியில் அமையப்பெற்றுள்ளது.

**தொலைநோக்கு**

பல்வகையினால் பலம் பெற்றதும் சகவாழ்வு மீள் நிர்மாணிக்கப்பட்டதும் அனைத்து கலாச்சாரங்களினதும் தனித்துவங்களும் பேணி போற்றப்படுகின்றதுமான இலங்கை தேசம்.

**பணிநோக்கு**

அனைத்து மக்கள் குழுக்களினதும் உரிமைகள் உறுதிசெய்யப்படுகின்ற, ஒருவரை ஒருவர் பரஸ்பரம் மதிக்கின்றதும், சகவாழ்வுடனும் அபிவிருத்தியடைந்ததுமான சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான கொள்கைகளை உருவாக்குதல், கலந்துரையாடல்களை ஏற்படுத்தல், வழிகாட்டுதல், வசதியளித்தல் மற்றும் அகற்க உரிக்கான நிகம்ச்சிக்கிட்டங்களை

**தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் நோக்கம்**

- அரசகரும மொழிகள் கொள்கை அமுலாக்கம் தொடர்பில் அரச நிறுவனங்களை வலுப்படுத்தல்.
- இலங்கையினுள் மும்மொழி உபயோகத்தினை ஊக்கப்படுத்தல் மற்றும் விருத்தி செய்தல்.
- தேசிய சகவாழ்வை மேம்படுத்துவதற்கு தேவையான தலைமைத்துவம் மற்றும் வசதிகளை வழங்குதல்.
- தேசிய சகவாழ்வை மேம்படுத்தல் அத்துடன் அரசகரும மொழிகள் கொள்கையை அமுலாக்க அரச மற்றும் தனியார் துறை அமைப்புகளை ஒருங்கிணைத்தல்.

## தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் செயற்பாடுகளும் பணிகளும்

- தேசிய கலந்துரையாடல்கள் பற்றிய விடயப்பரப்பு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களம் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயப்பரப்பிற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயாரித்தல், மீளாய்வு செய்தல் மற்றும் மதிப்பிடல்.

- தேசிய மொழிக் கொள்கையை அமுல்படுத்தல் மற்றும் அது தொடர்பான செயற்பாடுகள்.

- இனங்களுக்கிடையில் ஒற்றுமை மற்றும் சகவாழ்வினை ஏற்படுத்துவதற்கு தேவையான கலந்துரையாடல் நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தி அமுல்படுத்துதல்.

- தேசிய மொழிகள் மற்றும் இணைப்பு மொழியைப் பயன்படுத்தி இனங்களுக்கிடையே சமூக ரீதியாகவும், சமய ரீதியாகவும் சிறந்த சூழலையும், அன்னியோன்னிய புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதற்கு வசதியளித்தல்.

# 02.தேசிய சகவாழ்வு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, மற்றும் இந்து சமய விவகார அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் அமைப்பு.

## தேசிய சகவாழ்வு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, மற்றும் இந்து சமய விவகார அமைச்சு மற்றும் அதன் பிரிவுகள்

**தேசிய சகவாழ்வு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, மற்றும் இந்து சமய விவகார அமைச்சு**

தொ.பே 0112883926-28
தொலைநகல் 0112883929

மின்னஞ்சல்
admin@lanintegmin.gov.lk

**கொள்கை அபிவிருத்தி பிரிவு**

தொ.பே 01122883713
தொலைநகல் 011 2883714
மின்னஞ்சல்- policydevelopment@gmail.com

**சகவாழ்வு பிரிவு**

தொ.பே -011 2865942
தொலைநகல் 0112883785

**நிர்வாகப் பிரிவு**

தொ.பே-011 2883782
தொலைநகல் 0112883784
மின்னஞ்சல் - sasad@lanintegmin.gov.lk

**திட்டமிடல் பிரிவு**

தொ.பே -011 2886796
தொலைநகல் - 011 2886797
மின்னஞ்சல் - planningmnlsi@gmail.com

**கணக்குப் பிரிவு**

தொ.பே - 0112883935 0112883938
மின்னஞ்சல் - imprestnlsi@gmail.com

**உள்ளக கணக்காய்வு பிரிவு**

தொ.பே- 011 2501949

**வட மாகாண நிலையம்**
திருநகர்-கிளிநொச்சி

தொ.பே 021-2283660
தொலைநகல் 021 2283656

**தேசிய சகவாழ்வு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, மற்றும் இந்து சமய விவகார அமைச்சு மற்றும் அதன் நிறுவனங்கள்**

**அரசகரும மொழிகள் திணைக்களம்**

தொ.பே –
**011- 2888934**
தொலைநகல்-
**011 - 2883930**

மின்னஞ்சல்-
**comm@languagesdept.gov.lk**

**அரசகரும மொழிகள் ஆணைக்குழு**

தொ.பே -
**011 - 2889482**

தொலைநகல்-
**011 - 2875830**
மின்னஞ்சல்-
**olcommission@gmail.உழஅ**

**தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்**

தொ.பே –
**011 - 3092910**

தொலைநகல்-
**011 - 2884612**

மின்னஞ்சல்-
**nilet@sltnet.lk**

**அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம்**

தொ.பே –
**011 - 2877376**

தொலைநகல்-
**011 - 2884612**

மின்னஞ்சல்-
**ngosecretarialtsl@gov.lk**

**காணாமற் போன நபர்கள் தொடர்பான காரியாலயம்**

தொ.பே –
**011-3687333**
தொலைநகல்-
**011-2667098**
மின்னஞ்சல்-

**இந்து சமய, கலாச்சார அலுவல்கள் திணைக்களம்**

தொ.பே –
**011-2552643**

தொலைநகல்-
**011-2552824**

மின்னஞ்சல்-

**தேசிய ஒருமைப்பாட்டிற்கும், நல்லிணக்கத் திற்குமான அலுவலகம்**

தொ.பே -
**011-2343501**

தொலைநகல்
**011-4354518**

# 03.தேசிய சகவாழ்வு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, மற்றும் இந்து சமய விவகார அமைச்சின் கீழ் உள்ள பிரிவுகள் மற்றும் அவற்றின் செயலாற்றுகைகள்

### 3.1. மொழி உரிமைகள் பிரிவு

**அறிமுகம்**

தேசிய சகவாழ்வு¸ கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு ஸ்தாபித்ததன் நோக்கம், அரசகரும மொழிக்கொள்கையை வினைத்திறனுடன் செயற்படுத்துவது மற்றும் சகவாழ்வை மேம்படுத்துவதன் மூலம் தேசிய ஒற்றுமையுடன் அனைத்து பிரஜைகளுக்கும் சமமான சந்தர்ப்பங்கள் வழங்கும் சூழலை அமைத்துக் கொடுப்பதற்காகும்.

மேற்குறிப்பிட்ட நோக்கத்தை அடைவதற்காக மொழி உரிமைகள் பிரிவின் ஊடாக அரசகரும மொழிக்கொள்கையை செயற்படுத்துவது தொடர்பாக மற்றும் சகவாழ்வை கட்டியெழுப்புவதற்குரிய பல்வேறு கொள்கைகளை திட்டமிடுதல், நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல், சேவை வழங்கல், வசதியாக்கல் மற்றும் பின்னூட்டல்கள் போன்ற பல்வேறு விடயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மொழி உரிமைகள் பிரிவின் நோக்கம்**

- அரசகரும மொழிக்கொள்கையை செயற்படுத்துவதற்குரிய கொள்கைகளை திட்டமிடுதல்.
- அரச சேவையில் இருமொழியாக்கல் தொடர்பாக தேவையான பின்னணியை உருவாக்குதல்.
- அரசகரும மொழிக்கொள்கையை செயற்படுத்துவதற்காக பொது மக்களை வலுப்படுத்தல்.
- மொழி பரவலாக்கல் மற்றும் மேம்பாட்டிற்கு ஏற்ப இலங்கை மக்களிடையே நேர்மறையான எண்ணங்களை ஊக்குவித்தல்.

**மொழி உரிமைகள் பிரிவின் கடமைகள் :**

- அரச நிறுவனங்களில் மொழித் திட்டமிடல் செயற்பாட்டிற்கு பங்களிப்புச் செய்தல்.
- அரசகரும மொழிக்கொள்கையை செயற்படுத்துவது தொடர்பாக அரச உத்தியோகத்தர்களுக்கு தெளிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- அமைச்சின் விடயதானத்திற்குரிய பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச தினங்களை கொண்டாடும் செயற்திட்டங்களை நடாத்துதல்.
- நிறுவனங்களில் பெயர் பலகைகள் மும்மொழிகளிலும் அமைப்பதற்கு வசதியாக்கல்களை மேற்கொள்ளல்.
- அரச நிறுவனங்களிற்காக அத்தியவசியமான படிவங்களை மும்மொழிகளில் மொழிப்பெயர்த்து அச்சிடுவதற்கு பங்களிப்புச் செய்தல்.
- அரசகரும மொழிக்கொள்கை மீறல் தொடர்பாக முறைப்பாடுகளை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

## 3.1 அரசகரும மொழிகள் தொடர்பான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

### 3.1.1 அரச நிறுவனங்களில் மும்மொழிகளில் பெயர் பலகைகளை அமைத்தல்

அரசகரும மொழிக்கொள்கையை வினைத்திறனுடன் செயற்படுத்தும் நோக்கத்தின் கீழ் பிரதான 04 அளவீடுகளில் அரசகரும மொழிக்கொள்கையை செயற்படுத்துவதானது விசேட இடத்தில் உள்ளதுடன், அதன் கீழ் அரச நிறுவனங்களின் பிரதான பெயர் பலகைகள் முதல் வழிகாட்டி பலகைகள், பிரிவுகளைக் காட்டும் பலகைகள், உத்தியோகத்தர்களின் பெயர் பலகைகள் உட்பட அறிவித்தல் பலகைகள் என்பன மும்மொழிகளிலும் ஸ்தாபித்தல் அத்தியவசியமாகும். எந்தவொரு பிரஜையும் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள அரச நிறுவனங்களிற்கு வருகை தரும் சந்தர்ப்பங்களில் எந்த உத்தியோகத்தர்களிடமும் வினவாமல் தமக்குரிய இடத்திற்கு செல்வதற்கு ஏற்றவகையில் அலுவலக சூழலை பராமரிப்பதற்கு மும்மொழிகளிலான பெயர் பலகைகள் மற்றும் வழிகாட்டும் பலகைகள் மிக முக்கியமானவையாகும்.




சேவை பெறுனர்களின் நேரத்தை விரயமாக்காமல், உரிய இடத்திற்கு சென்றடைவதற்கும், சேவை பெறுனர்களுக்காக நட்புச்சூழலை உருவாக்குவதற்கும், சேவை பெறுனர்களுக்கு திருப்திகரமான சேவையை வழங்குவதற்கும் இதன் மூலம் சாத்தியமாகும்.

இவ்விடயங்களைக் கருத்தில் கொண்டு இப்பிரிவால் **2018 ஆம் ஆண்டு 61 அரச நிறுவனங்களிற்கு மும்மொழிகளில் பெயர் பலகைகள் அமைப்பதற்கு ரூ. மில்லியன் 4.31 தொகையை** ஒதுக்கீடாக வழங்கப்பட்டுள்ளதுடன், அவ்வாறு வழங்கப்பட்ட அரச நிறுவனங்களின் கீழ்

- 02 மாவட்டச் செயலகங்கள்
- 41 பிரதேச செயலகங்கள்
- 01 பிரதேச சபை
- 16 பாடசாலைகள்
- 01 இருமொழி பிரிவிற்கு மும்மொழிகளில் பெயர்பலகைகள் தயாரிப்பதற்கு உரிய ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.







- மேலும், 200 மில்லியன் செயற்பாட்டு திட்டமிடலுக்கு சொந்தமான 2018 ஆம் ஆண்டு மேலதிகமாக 63 அரச நிறுவனங்களுக்கு மும்மொழி பெயர் பலகைகள் தயாரிப்பதற்காக **ரூ. மில். 2.922** தொகை ஒதுக்கிட்டு வழங்கப்பட்டுள்ளது.

### 3.1.2 அரச நிறுவனங்களில் அத்தியவசியமான படிவங்கள் மும்மொழிகளில் மொழிப்பெயர்ப்பு செய்வதற்கும், அச்சிடுவதற்கும் பங்களிப்புச் செய்தல்.


அரச நிறுவனங்களில் பொதுமக்களுக்கு பயன்படும் வண்ணம் அத்தியவசியமான படிவங்கள் மும்மொழிகளில் மொழிபெயர்த்து அச்சிடுவதானது இதன் மூலம் இடம்பெறுவதோடு, அதன் மூலம் பொது மக்களுக்கு சமமான சேவை வாய்ப்புக்களை வழங்குவதற்கு உள்ள திறனை மேம்படுத்துவதாகும்.



இங்கு அரச நிறுவனங்களில் மும்மொழிகளிலும் அற்ற படிவங்கள் பெற்று மும்மொழிகளில் மொழிபெயர்த்து மீண்டும் அந்நிறுவனத்திற்கு வழங்கப்படும் செயன்முறை இடம்பெறும். 2017 ஆம் ஆண்டு மேற்குறித்த விடயம் ஆரம்பிக்கப்பட்டு 2018.12.31 ஆம் திகதி வரை 1008 படிவங்கள் மும்மொழிகளில் மொழிபெயர்க்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளது.

அவ்வாறு மும்மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட படிவங்களின் தட்டச்சு மற்றும் பக்க அமைப்புக்களை ஒழுங்கமைத்து அச்சிடல் நடவடிக்கைகளிற்காக நிதி ஒதுக்கீட்டின் ஊடாக பிரின்ட் என்ட் பிரின்ட் அச்சிடும் நிறுவனத்தை தெரிவு செய்து அச்செயற்பாடுகள் நடாத்தப்பட்டு வருகின்றன. அங்கு, அந்நிறுவனத்தின் மூலம் தட்டச்சு மற்றும் பக்க அமைப்புக்களை மேற்கொண்ட படிவங்கள் இறுதி அச்சீட்டுக்கு முன்னர் சரிபார்த்தல் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றது. மேற்குறிப்பிட்ட விடயங்களிற்காக 2018 ஆம் ஆண்டு **ரூ. மில். 1.022** தொகையானது கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

### 3.1.3 நாடளாவிய ரீதியில் மொழிக்கொள்கையை செயற்படுத்துவது தொடர்பாக செயலமர்வுகளை நடாத்தல்.
**(பொலிஸ் திணைக்களங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் மாகாண உள்ளூராட்சி நிறுவனங்கள்)**



இங்கு அரசகரும மொழிக்கொள்கையை செயற்படுத்துவது தொடர்பாக அரச நிறுவனங்களுக்கு தெளிவூட்டல்கள் நடாத்தப்பட்டு வருகின்றது. அங்கு, அரச நிறுவனங்களில் அரசகரும மொழிக்கொள்கையை செயற்படுத்துவதற்கு தேவையான மொழித்திட்டமிடலை தயாரிப்பதற்குரிய தெளிவூட்டல்கள் வழங்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட செயலமர்வை நடாத்துவதற்கு தேவையான அரச நிறுவனங்களில் மொழித் திட்டமிடலை தயாரிப்பது சம்பந்தமாக 5000 வழிகாட்டி கைநூல்களை அச்சிடும் நடவடிக்கைகள் அரச அச்சீட்டு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற அதேவேளை, 2018.12.31 ஆம் திகதி வரை அமைச்சிற்கு 1991 வழிகாட்டி கைநூல்கள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

### 3.1.4 கீழ் மட்டத்தில் ஆரம்ப துறையில் சேவையாற்றும் அரச உத்தியோகத்தர்கள் அரசகரும மொழிக்கொள்கையை செயற்படுத்துவதற்கு ஈடுபடுத்துதல்.

மேற்குறிப்பிட்ட விடயத்தின் கீழ் மொழிக்கொள்கையை செயற்படுத்துவது தொடர்பாக கிராம உத்தியோகத்தர்களை தெளிவுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதில்,

**மேல் மாகாணத்தின் கீழ்**

- கொழும்பு மாவட்டத்தில் 06 நிகழ்ச்சிகள்
- கம்பஹா மாவட்டத்தில் 11 நிகழ்ச்சிகள்
- களுத்துறை மாவட்டத்தில் 05 நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

**ஊவா மாகாணத்தின் கீழ்**

- மொனராகலை மாவட்டத்தில் 04 நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் 2789 கிராம உத்தியோகத்தர்களுக்கு இது தொடர்பாக தெளிவூட்டல் இடம்பெற்ற அதேவேளை, அதற்காக 2018 ஆம் ஆண்டு **ரூ. மில். 2.136** தொகையானது வழங்கப்பட்டுள்ளது.





### 3.1.5 அரசகரும மொழிக்கொள்கை மற்றும் சகவாழ்விற்குரிய விசேட கருத்திட்டங்கள்



அமைச்சின் விடயதானத்திற்கிணங்க வெவ்வேறு பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள நிறுவனங்களில் மூலம் பெறப்படும் அரசகரும மொழிக்கொள்கை மற்றும் சகவாழ்வை மேம்படுத்துவதற்கு தாக்கத்தை செலுத்தும் அனுகூலமான கருத்திட்டங்கள் தொடர்பாக ஒதுக்கீடுகளை வழங்குவதற்கு இவ்விசேட கருத்திட்டங்களின் கீழ் இடம்பெறும்.

அதற்கிணங்க, மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளின் கீழ் 2018 ஆம் ஆண்டு 62 விசேட கருத்திட்டங்கள் தொடர்பாக **ரூ. மில். 8.07** தொகையானது வழங்கப்பட்டுள்ளது.






இங்கு பாடசாலைகள், சமய ஸ்தலங்கள் மற்றும் சமய பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள நூலகங்களிற்காக உபகரணங்கள் மற்றும் மும்மொழி புத்தகங்கள் வழங்குதல், தமிழ் மொழி மாநாடுகள் நடாத்துதல், தமிழ் மொழி தினத்தை கொண்டாடுதல் ஆகிய விசேட கருத்திட்டங்கள் இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

### 3.1.6 அமைச்சின் விடயதானத்திற்கிணங்க தேசிய தேசிய மற்றும் சர்வதேச தினத்தை கொண்டாடுதல்.

இந்த செயற்பாடுகளின் கீழ் 2018.02.21 ஆம் திகதி சர்வதேச தாய்மொழி தினத்தை கொண்டாடுவதற்தற்காக அரசகரும மொழிகள் திணைக்களத்திற்கு **ரூ. மில். 0.44** நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.








### 3.1.7 வெளிநாட்டு உதவி கருத்திட்டங்களிற்கமைய விடயங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் செயற்படுத்தலுக்கு, உரிய அமைச்சின் ஒத்துழைப்பை பெற்றுக்கொடுத்தல்.

**தேசிய மொழிகள் சமநிலை மேம்படுத்தும் கருத்திட்டம் - NLEAP**

1. கௌரவ அமைச்சர் மற்றும் கனேடிய உயர் ஸ்தானிகர் இடையே சந்திப்பானது கனடா உயர் ஸ்தானிகரின் உத்தியோகப்பூர்வ இல்லத்தில் இடம்பெற்றது. 2018.07.04 ஆம் திகதி இடம்பெற்ற இந்த சந்திப்பிற்கு கௌரவ அமைச்சர், அமைச்சின் செயலாளர், NLEAP பிரதிநிதிகள், கனேடிய உயர் ஸ்தானிகர் ஆணையத்தின் பிரதிநிதிகள் மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.

2. NLEAP கருத்திட்ட பிரதிநிதிகளுடன் 2018.07.12 ஆம் திகதி கருத்திட்டத்தின் பின்னூட்டல் கூட்டமொன்று செயலாளரின் தலைமையில் இடம்பெற்றது.

3. NLEAP–Project Implementation Plan தயாரிப்பதற்கு தேவையானவற்றை நடத்துவது தொடர்பாக 2018.07.18 ஆம் திகதி அமைச்சில் இடம்பெற்றது. செயலாளரின் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்திற்கு அமைச்சு, அரசகரும மொழிகள் திணைக்களம், அரசகரும மொழிகள் ஆணைக்குழு, தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பான தேசிய செயலகத்தின் 25 உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.

4. NLEAP–Transition to Implementation Workshop, 2018.08.13 முதல் 17 வரை இடம்பெற்றது. அமைச்சு மற்றும் அதன் இணை நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர். செயலமர்விற்கான வள ஒத்துழைப்புக்கள் கனடா புத்திஜீவிகளின் குழுவால் மேற்கொள்ளப்பட்டன.





**USAID Projects**

- ❖ **Commencement of Initiatives for Sustained Peaceful Inter Ethnic through Economic Development Project (INSPIRED)**
- ❖ **Social Cohesion and Reconciliation (SCORE)**

2018.01.01 ஆம் திகதி மேற்குறிப்பிட்ட கருத்திட்டங்களுக்கு உரித்தான பின்னூட்டல் கூட்டமானது நடைபெற்றது. எதிர்கால நடவடிக்கைகைகள் குறித்த செயற்பாட்டுத் திட்டத்தை வழங்குவதற்கு சம்பந்தப்பட்டோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்குறித்த கூட்டமானது கௌரவ அமைச்சரின் தலைமையில் இடம்பெற்றது.

- ❖ **Project on Strengthening Reconciliation Process in Sri Lanka**

1. 2018.09.28 - மேற்குறிப்பிட்ட கருத்திட்டத்தில் பிரதிநிதிகள் மற்றும் அமைச்சின் செயலாளருடன் ஏனைய உத்தியோகத்தர்களின் கூட்டம் இடம்பெற்றது. British Council பிரதிநிதிகள் மற்றும் கருத்திட்ட பணிப்பாளரும் கலந்து கொண்டனர்.
2. 2018.10.29 - British Council பிரதிநிதிகள் மற்றும் அரசகரும மொழிகள் திணைக்கள உத்தியோகத்தர்களின் சந்திப்பு இடம்பெற்றது.
3. 2018.11.01 - British Council பிரதிநிதிகள் மற்றும் தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன உத்தியோகத்தர்களின் சந்திப்பு இடம்பெற்றது.
4. 2018.11.02 - British Council பிரதிநிதிகள் மற்றும் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினது உத்தியோகத்தர்களின் சந்திப்பு இடம்பெற்றது.

5. British Council பிரதிநிதிகள் கஹவத்தை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இரண்டாம் மொழி தேர்ச்சி தொடர்பான இரு தின செயலமர்வு கண்காணிப்பு சுற்றுலா நடைபெற்றது.
6. British Council பிரதிநிதிகள் இம்புல்பே பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இரண்டாம் மொழி தேர்ச்சி தொடர்பான இரு தின செயலமர்வு கண்காணிப்பு சுற்றுலா நடைபெற்றது.
7. British Council பிரதிநிதிகள் கீழ் குறிப்பிட்டுள்ள அரச நிறுவனங்களில் இரண்டாம் மொழி கற்கைகளுக்குரிய தகவல்கள் ஒன்றிணைத்து கண்காணிப்பு சுற்றுலா மேற்கொள்ளப்பட்டது.
    - மாவட்டச் செயலகம் - வவுனியா
    - மாவட்டச் செயலகம் - அம்பாறை
    - மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்
    - மாவட்டச் செயலகம் - நுவரெலியா

❖ கௌரவ அமைச்சர் மற்றும் சிங்கப்பூர் பிரதிநிதியுடன் 2018.06.21 ஆம் திகதி அமைச்சில் இடம்பெற்றது.

❖ Peace Building Priority Plan – இதற்கு இணையாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் இடம்பெற்ற செயற்பாட்டு குழு கூட்டம் தொடர்பாக அமைச்சின் பங்குப்பற்றுதலானது பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

### 3.1.8 சமூக ஊடகங்கள் ஊடாக மொழி உரிமை தொடர்பான முறைபாடுகளை பெற்றுக்கொள்ளக் கூடிய நவீன தொடர்பாடல் மத்திய நிலையத்தை ஸ்தாபித்தல் மற்றும் நடாத்திச் செல்லுதல்.



அரசகரும மொழிக்கொள்கை மீறல் தொடர்பான முறைப்பாடுகளை பெற்று அரசகரும மொழிக்கொள்கையை நாட்டில் உரிய முறையில் நிலை நாட்டுவதை முதன்மையாகக் கொண்டு நவீன தொழில்நுட்பங்களின் ஊடாக மேம்படுத்தப்பட்ட அமைச்சின் மொழிகள் அழைப்பு மத்திய நிலையம் 2018.04.09 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

அதற்கிணங்க 1956 எனும் துரித தொலைபேசி இலக்கத்தினூடாக மற்றும் 0714854734 இலக்கத்தின் ஊடாக viber, whatsapp மற்றும் Imo ஆகிய சமூக ஊடகங்களின் மூலம் மொழிகள் அழைப்பு மத்திய நிலையத்திற்கு மொழிப் பிரச்சினைகளை முன்வைப்பதற்கு வழியமைக்கப்பட்டுள்ளது.








மொழிகள் அழைப்பு மத்திய நிலையத்திற்கு 1956 துரித தொலைபேசி இலக்கத்தினூடாக மற்றும் 0714854734 இலக்கத்தின் ஊடாக viber, whatsapp மற்றும் Imo ஆகிய சமூக ஊடகங்களின் மூலம் மொழிப் பிரச்சினைகளை முன்வைத்த நபர்களுக்கு "**தன்னார்வ மொழிகள் உரிமை கண்காணிப்பாளர்கள்**" என தெரிவுசெய்து அவர்களுக்கு அடையாள அட்டை மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டமானது 2018.10.12 ஆம் திகதி ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் மஹிந்த சில்வா கேட்போர்கூடத்தில் நடாத்தப்பட்டதோடு, அந்நிகழ்ச்சியில் 200 இற்கும் அதிகமானோர் பங்குபற்றியிருந்தனர்.

1956 மொழிகள் அழைப்பு மத்திய நிலையத்தால் அரச நிறுவனங்களை தெளிவூட்டுவது தொடர்பாக 16,000 ஸ்டிக்கர்கள் அச்சிடப்பட்டன.
அதற்கிணங்க மொழிகள் அழைப்பு மத்திய நிலையத்திற்கு மேற்குறிப்பிட்ட விடயங்களுக்காக இடம்பெற்ற செலவீனங்களாக 2018 ஆம் ஆண்டு **ரூ. மில். 1.897** காணப்படுகின்றது.

### 3.1.9 அமைச்சு மற்றும் அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு திறன் அபிவிருத்தி செயற்திட்டம்




2018 ஆம் ஆண்டு அமைச்சின் ஊடாக ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக செயற்பாட்டு பங்களிப்பை வழங்கிய அமைச்சின் உத்தியோகத்தர்கள், அமைச்சின் கள உத்தியோகத்தர்கள் மற்றும் அமைச்சின் இணை நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் அறிவு, திறமை மற்றும் எண்ணங்களின் மேம்பாடு சம்பந்தமாக இந்நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டது.

அதற்கேற்ப, 2017.10.17 ஆம் திகதி பத்தரமுல்லை அபேகம எனும் இடத்தில் 250 உத்தியோகத்தர்களுக்கும் அதிகமானோரின் பங்குபற்றலுடன் மேற்குறித்த நிகழ்ச்சியானது இடம்பெற்றது.





## செயற்திட்டத்தின் படியான செயலாற்றுகை
## மொழி உரிமைகள் பிரிவுக்கான நிதி முன்னேற்றம்




| தொ. இல | விபரம் | உத்தேசிக்கப்பட்ட தொகை (ரூபா/மில்லியன்) | உண்மைச் செலவு (ரூபா/மில்லியன்) | விகிதம் |
|---|---|---|---|---|
| 01 | அரச நிறுவனங்களில் மும்மொழிப் பெயர் பலகைகளை நிறுவுதல் | 4.31 | 4.31 | 100% |
| 02 | அரச நிறுவனங்களில் பயன்படும் படிவங்களை மும்மொழிகளிலும் மொழிப்பெயர்த்தல். | 1.149 | 1.022 | 60% |
| 03 | நாடு பூராகவும் மொழிக் கொள்கையினை அமுல்ப்படுத்தல் தொடர்பான செயலமர்வுகளை நடாத்தல்<br>I. பொலிஸ் திணைக்களம், தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சின் உள்ளூராட்சி சிறுவகனங்கள்<br>II.கீழ் மட்டத்தில் அடிப்படைத் துறையில் சேவையாற்றும் அரச உத்தியோகத்தர்கள் | 2.339<br><br>3.23 | 2.339<br><br>2.136 | -<br><br>66.1% |
| 04 | அரசசரும மொழிக் கொள்கைகள் தொடர்பாக விஷேட நிகழ்ச்சித் திட்டம் | 8.21 | 8.070 | 98.2% |
| 05 | அமைச்சின் குறிக்கோளுக்கான தேசிய மற்றும் சர்வதேச தினத்தினை கொண்டாடுதல் | 0.44 | 0.44 | 100% |
| 06 | வெளிநாட்டு உதவி கருத்திட்டங்களுக்கான வேலை திட்டமிடல் மற்றும் அமுல்படுத்தலுக்கான உரிய அமைச்சுக்கு உதவுதல். | 0.021 | 0.011 | 52.3% |
| 07 | மொழி உரிமை புகார்களை பெற்றுக்கொள்வதற்கான நவீன தகவல் மையத்தை நிறுவுதல் | 2.15 | 1.897 | 88.2% |
| 08 | அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கான திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 1.761 | 1.566 | 88.9% |
| | **மொத்தம்** | **23.61** | **19.452** | **82.3%** |

### 3.2. சகவாழ்வு, கலந்துரையாடல்கள் பிரிவு

**அறிமுகம்**

சகவாழ்வு, கலந்துரையாடல்கள் பிரிவினூடாக இனங்களுக்கிடையில் ஒத்துழைப்பு மற்றும் சகவாழ்வை ஏற்படுத்துவதற்கு தேவையான நிகழ்ச்சித்திட்டங்கள் அடையாளம் கண்டு, அறிமுகப்படுத்தி அமுல்படுத்துவதற்காக இனங்களுக்கிடையில் கலாசார, சமூக மற்றும் சமயப் பின்னணிகளை பரஸ்பரம் விளங்கிக் கொள்வதற்கு ஏற்ற வசதிகளை வழங்குதல் இடம்பெறுகிறது.

அதற்காக இலங்கையில் வாழும் அனைத்து இனங்கள் மற்றும் இனக் குழுக்களின் மரபுகளை பாதுகாத்து அனைவரினதும் தனித்துவ அடையாளங்களை பாதுகாத்தல், பரஸ்பர நம்பிக்கை மற்றும் கௌரவத்தை கட்டியெழுப்புதல் இடம்பெறுகிறது.

**நோக்கம்**

“கலந்துரையாடல்கள் நிகழ்ச்சித்திட்டத்தினூடாக இனங்களுக்கிடையில் சகவாழ்வினை கட்டியெழுப்புதல்.”

**சகவாழ்வு, கலந்துரையாடல்கள் பிரிவின் பணிகள்**

- வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்திற்கு அமைய தேசிய சகவாழ்வு மேம்பாட்டுடன் தொடர்புடைய செயற்பாடுகளை அமுல்படுத்தல்.
- இனங்களுக்கிடையில் ஒத்துழைப்பு மற்றும் சகவாழ்வினை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- சமூகத்தில் ஓரங்கட்டப்பட்ட குழுக்களுக்கான வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் ஊடாக சகவாழ்வை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- தேசிய சகவாழ்வு மேம்பாட்டு உதவியாளர்கள் ஊடாக குறித்த மாவட்ட மற்றும் பிரதேச செயலயகப் பிரிவுகளில் காணப்படும் சகவாழ்வுடன் தொடர்புடைய பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல்.
- சகவாழ்வு மேம்பாட்டிற்கு ஏற்புடைய தரப்புகள் ஊடாக பல்வேறு மட்டங்களில் கலந்துரையாடல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
- பல்வேறு இனக் குழுக்களின் தனித்துவங்களும் மரவுகளும் மற்றும் கலாசாரங்களையும் பாதுகாத்து நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
- தேசிய சகவாழ்வு மேம்பாட்டு உதவியாளர் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கணைப்பாளர் உத்தியோகத்தர்களுக்கு சகவாழ்வு தொடர்பில் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குதல்.

**3.2.1.. சகவாழ்வுச் சங்கத்தினை பதிவு செய்தல் மற்றும் சகவாழ்வுச் சங்கத்திற்கான கருத்திட்டம்.**

நாட்டின் தற்போதைய தேவைப்பாடுகள் மற்றும் அரசகரும மொழிக்கொள்கைக்கு இணைவாக பல்வேறு இனப் பிரிவுகளுக்கிடையில் சகவாழ்வினை உருவாக்குவதில் இலங்கையரை உருவாக்குவதற்குரிய சுற்றாடலை ஏற்படுத்துவது அமைச்சின் பணியாகும். அவ்வாறான தேவைப்பாடுகளை பூர்த்திசெய்வதற்கு சகவாழ்வுச் சங்கம் உதவுவதாகும். இந்தச் சகவாழ்வுச் சங்கமானது பல்வேறு நோக்கங்கள் மற்றும் பணிகளை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. அது தேசிய சகவாழ்வு, கலாசாரம், கலை, மொழி, பல்வேறு விழாக்கள், விளையாட்டு, பல்வேறு கருத்திட்டங்கள் மற்றும் ஓரங்கட்டப்பட்ட நிலைக்குள்ளான குழுக்களை வலுவூட்டுவதன் மூலம் பரந்த எல்லை ஒன்றுக்கு வழிவகுக்கின்றது.

சகவாழ்வு மேம்படுத்தலுக்கும் மொழியைக் கற்றுக்கொள்வதற்காகவும் ஆர்வம் காட்டும் சாதாரண மக்களினால் சகவாழ்வுச் சங்கத்தை உருவாக்க முடியும். பிரதேச செயலகப் பிரிவினுள் உருவாக்கப்பட்டுள்ள இவ்வாறான அடிப்படைச் சகவாழ்வுச் சங்கத்தின் தலைவர்கள் மற்றும் செயலாளர்களின் ஒத்துழைப்புடன் பிரதேச சகவாழ்வுச் சங்கத்தினை உருவாக்க முடிவதுடன், பிரதேச சகவாழ்வுச் சங்கத் தலைவர்களினதும் செயலாளர்களினதும் ஒத்துழைப்புடன் மாவட்டச் சகவாழ்வுச் சங்கத்தினை உருவாக்க முடியும். மாவட்டச் சகவாழ்வுச் சங்கத்தின் ஆலோசனைகள் மாவட்டச் செயலாளருக்கு உரியதாகும்.

அனைத்து சகவாழ்வுச் சங்கங்களும் ஒன்றுகூடி தேசிய மாநாடு ஒன்று தேசிய மட்டத்தில் நடாத்தப்படவேண்டியதுடன் அதன் ஒருங்கிணைப்பு தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சினால் மேற்கொள்ளப்படவேண்டும். இவ்வாறு உருவாக்கப்பட்டுள்ள சகவாழ்வுச் சங்கங்கள் ஊடாக கிராம மட்டத்தில் செயற்படும் அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் சிவில் அமைப்புக்களுடன் இணைந்து கருத்திட்டங்கள் மேற்கொள்ளுதல் வேண்டும்.

சிறு வியாபாரிகளின் வாழ்வாதார வழியை மேம்படுத்துதல், ஓரங்கப்பட்ட நிலைக்குள்ளாகியுள்ள நபர்களை அல்லது இனப் பிரிவினரை சமூகமயப்படுத்துவதற்குத் தேவையான நலன்புரி வசதிகளை வழங்குதல். சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மொழி பெயர்ப்புச் செய்தல், சமூகத்திற்குள் சட்டவிரோத மதுபாவனை மற்றும் ஆயுத கலாசாரத்தினை புறக்கணித்தல், போன்றன தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம், கல்வி, கலாசாரம், கலை, மதம் மற்றும் விளையாட்டு போன்றவற்றை மேம்படுத்துவதற்காக இவ்வாறான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் கருத்திட்டங்கள் மூலம் பிரதேச மட்டத்தில் நன்மைகள் பல மக்களுக்கு உரித்துடையதாகும். 2018ம் வருடத்தில் சகவாழ்வுச் சங்கம் ஊடாக 97 கருத்திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் நாடு பூராகவும் 2018ம் வருடத்தில் 395 சகவாழ்வுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அத்தோடு சிறந்த சகவாழ்வுச் சங்கங்களுக்காக canopy Hut மற்றும் நாற்காலி போன்ற வழங்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் 23 மாவட்டங்களில் 79 canopy Hut வழங்கப்பட்டுள்ளதுடன் கொழும்பு பிரதேச செயலகங்களுக்காக 600 நாற்காலிகள் 2018ம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது.

**3.2.2. ஊடகத்தின் மூலம் சகவாழ்வினை ஏற்படுத்துதல்**
**வானொலி நிகழ்ச்சித்திட்டம் :-**

தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிக் கொள்கையினை அமுல்படுத்துதல் போன்றன எமது அமைச்சின் நோக்கமாகும். இதனை பொதுமக்களிடத்தில் பிரபலமடையச் செய்வதற்கு ஊடக நிகழ்ச்சித்திட்டமானது காலத்தின் தேவைப்பாடாகும். ஊடக நிகழ்ச்சித்திட்டங்களில் ஒன்றான வானொலி நிகழ்ச்சித்திட்டமானது முன்னணி இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன் அமைச்சின் நோக்கம், குறிக்கோள் மற்றும் விடயம் அமைச்சின் கீழ் இணைந்த நிறுவனங்களின் பணிகள் மக்களை சென்றடைவதற்காக

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிங்கள தேசிய சேவை ஊடாக சுபாரதி எனும் வானொலி நிகழ்ச்சித் திட்டமானது சிங்கள மொழி மூலமும் தமிழ் தேசிய சேவை ஊடாக விடியும் வேளை எனும் வானொலி நிகழ்ச்சித்திட்டம் தமிழ் மொழி மூலம் ஒவ்வொரு திங்கட் கிழமையும் (பௌர்ணமி தினம் தவிர்ந்த) மு.ப. 7.00 மணி தொடக்கம் 8.00 மணி வரையும் ஒலிபரப்புச் செய்யப்படும். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 10 சேவைகள் ஊடாக தினமும் பிரதான செய்தி அறிக்கைக்கு முன்னர் ஒலிபரப்புச் செய்யப்படும் செய்திக்கு முன் அறிவிப்பாக அமைச்சின் செய்தி ஒலிபரப்புச் செய்யப்படும். அமைச்சு தொடர்பான விழிப்புணர்வினை மேம்படுத்தும் நோக்கத்துடன் அனைத்துச் செய்தி அறிக்கைகளுக்கு முன்னர் ஒலிபரப்பப்படும். செய்தி அறிக்கையினை கேட்கும் நேயர்கள் தொடர்ச்சியாக கேட்பதனால் செய்தி அறிக்கைக்கு முன்னரான தகவலினை ஒலிபரப்புச் செய்வதன் மூலம் அமைச்சு தொடர்பாக பிரஜைகளின் விழிப்புணர்வினை சுயமாக அதிகரிக்கச் செய்ய முடியும். செய்திக்கு முன்னரான ஒலிபரப்பானது அனைத்துப் பிரதான செய்தி அறிக்கைகளுக்கு முன்னர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 10 சேவைகள் மூலம் ஒலிபரப்புச் செய்யப்படும்.

2018 ம் வருடம் சிங்களம் மற்றும் தமிழ் நிகழ்ச்சித் திட்டங்கள் 84 நடாத்தப்பட்டுள்ளதுடன் மொனராகலை, நுவரேலியா, யாழ்ப்பாணம், மாத்தறை, மட்டக்களப்பு, மன்னார், மாத்தளை, புத்தளம், கிளிநொச்சி, இரத்தினபுரி, முல்லைத்தீவு, கண்டி மற்றும் நுவரேலியா ஆகிய மாவட்டங்களிலுள்ள மாவட்டச் செயலகங்களிலிருந்து நேரடி ஒலிபரப்புச் செய்யப்பட்டுள்ளது.



ஊடகத்தின் மூலம் சகவாழ்வினை ஏற்படுத்துவதற்காக தொலைக்காட்சிப் விளம்பரம் செய்தல் மற்றும் ஸ்டிக்கர் ஒட்டும் நிகழ்ச்சித்திட்டம் என்பன அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாட்டில் நிகழும் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது தொலைக்காட்சி ஊடகத்தின் மூலம் 10 வினாடிகள் சிறிய தொலைக்காட்சி விளம்பரத்தினை தயாரித்து விளம்பரப்படுத்துவது இதன் நோக்கமாகும். இதன் மூலம் பெருமளவிலானோரிடத்தில் சகவாழ்வு, நல்லிணக்கம் தொடர்பான தகவலினை ஒரே நேரத்தில் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. விளம்பர நாடாவினை ஒளிபரப்புச் செய்வதன் ஊடாகவும் மேலும் பொதுமக்களிடத்தில் உள்ள சமாதானம் தொடர்பான மனப்பாங்கினை புதுப்பிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.






ஸ்டிக்கர் ஒட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் “இலங்கையர் எம் அடையாளம் - பன்மைத்துவம் எம் சக்தி” எனும் தகவலினை மக்களிடையே பிரபல்யப்படுத்துவதற்கான விளம்பர நடவடிக்கை நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்டு வருகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் மொனராகலை, நுவரேலியா, மாத்தறை, மட்டக்களப்பு மற்றும் மன்னார் ஆகிய இடங்களிலுள்ள பேரூந்து தரிப்பு நிலையங்களில் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது.

**3.2.3. கலை மற்றும் கலாசாரத்தின் ஊடாக சகவாழ்வினை பிரபல்யப்படுத்துதல்**

(1) **பாடலின் ஊடாக சகவாழ்வினை மேம்படுத்துதல்**

பிரபலமான கலை ஊடகங்களில் பாடல் தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டினை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுக்கக் கூடிய மிகவும் திறன்மிக்கதும் பிரபலமானதுமான ஊடகமாகும். அதன் மூலம் அநேக ஒரே நேரத்தில் கலை மற்றும் இரசனை என விளிக்க முடியும். ஆகவே பாடலின் மூலம் சகவாழ்வினை மேம்படுத்துவதற்காக சாதுஜன ராவ பாடல் கச்சேரியினை அறிமுகப்படுத்த முடியும். 2018ம் வருடத்தினுள் இவ்வாறான 10 நிகழ்ச்சிகள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இதுவரையும் 08 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. காலி, மாத்தறை, கேகாலை, புத்தளம், களுத்துறை, கொழும்பு (மஹரகம), மொனராகலை, ஆகிய இடங்களில் நடாத்தப்பட்டுள்ளது. இதற்காக பல்லின இனவர்க்கங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், தனியார் நிறுவனங்களின் உறுப்பினர்கள் ஆகியோர் சமூகமளிப்பார்கள்.





(II) **குறுந்திரைப்படம் (Short Film) ஒளிபரப்புச் செய்தல்**

**(இலங்கையர் எனும் அடையாளத்தை மூன்றாவது கண்ணால்...........)**

கலையின் ஓர் அம்சமாக ஒலி ஒளிபரப்பு ஊடகமாக திரைப்படத்தினை கூறுமுடியும். திரைப்படமானது ஏனைய கலைகளுக்கிடையில் முன்னிலையில் உள்ள ஊடகமாக அனைத்து மட்டத்திலுமுள்ளவர்களும் கலையை இரசிக்க முடியும் இவ்வாறு வழங்கப்படும் தகவல் மற்றும் அனுபவம் போன்ற அனைவரிடமும் இலகுவாக கேட்க முடியும் என்ற காரணத்தினாலாகும்.



“இலங்கையர் எம் அடையாளம் - பன்மைத்துவம் எம் சக்தி” எனும் கருப்பொருளை மையமாகக் கொண்ட இந்தப் போட்டியில் சிங்களக் குறுந்திரைப்படம், தமிழ்க் குறுந்திரைப்படம், ஆங்கிலக் குறுந்திரைப்படம் மற்றும் இருமொழிக் குறுந்திரைப்படம் (சிங்களம் மற்றும் தமிழ்) என 4 போட்டிப்பிரிவுகள். அதன்பிரகாரம் அனைத்துப் போட்டிப்பிரிவுகளிலும் போட்டியாளர்கள் குறித்த கருப்பொருளினை ஆக்கத்திறன் மற்றும் புத்தாக்கம் மிக்க ஆக்கங்கள் இங்கே சமர்ப்பிக்கப்பட்டன. அமைச்சுக்கு கிடைக்கும் ஆக்கங்களை நிபுணத்துவம் மிக்க துறைசார் புலமையாளர்கள் உள்ளடங்கிய நடுவர் குழுவினரால் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

வெற்றியீட்டிய போட்டியாளருக்குரிய விருது மற்றும் சான்றிதழ் போன்றவற்றினை வழங்கும் நிகழ்வானது கௌரவ சபாநாயகர் கரு ஜெயசூரிய அவர்களின் தலைமையில் 2018.10.08ம் திகதி பி.ப 2.00 மணிக்கு தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் “தரங்கனி” சினிமா திரையரங்கில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.



**3.2.4. ஓரங்கப்பட்ட நிலைக்குள்ளான குழுவினரை உயர்நிலைக்கு கொண்டு செல்லல்.**



சகவாழ்வு நிறைந்த சமூகத்தை கட்டியெழுப்புவதற்காக நாட்டிலுள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுதல் வேண்டும். அவ்வாறு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாமை சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அவ்வாறான சமூகத் தாக்கமானது நாட்டின் நீடித்து நிலைக்கக் கூடிய அபிவிருத்திக்கு பாதகமாகும். பௌதீக மற்றும் மனித வளங்கள் பிரிவுக்கும் இடையேயான கூறுகள் மற்றும் பொருளாதார கஷ்டம் போன்றனவற்றால் எமது நாட்டு மக்கள் சமூகம் ஓரங்கட்டப்பப்பட்ட நிலைக்குள்ளாகியுள்ளது. கல்வி, தொழில், சமூகப் பின்னணி, பால்நிலை, பொருளாதார நிலைமை ஆகிய பல்வேறு காரணங்களால் நாட்டிலுள்ள மக்கள் ஓரங்கட்டப்பப்பட்ட நிலைக்குள்ளாக வேண்டிய நிலையுள்ளது. முதியோர், பெண்கள், ஆண்கள், சிறுவர்கள் போன்ற குழுவினரும் அவ்வாறே ஓரங்கட்டப்பப்பட்ட நிலைக்குள்ளாகியுள்ளனர்.



அதன்பிரகாரம், கல்வி உரிமையினைப் பெற்றுக்கொள்வதற்காக பொருளாதாரம், சமுதாயம், சமத்துவமின்மை அல்லது இனப்பாகுபாடு போன்றவற்றால் அல்லது மதம் அல்லது கல்வி தொழிற்பாட்டின் மூலம் எந்தவொரு அநீதிக்கோ அல்லது ஓரங்கட்டப்படுதல் போன்றவற்றை தடுப்பதற்காக எமது கவனத்தை செலுத்துகின்றோம். அதன்பிரகாரம் ஓரங்கட்டப்பப்பட்ட நிலைமைக்கு உள்ளாகியுள்ள குழுக்களின் சிறுவர்களின் கல்வி அணுகுவழிக்கான வசதியினை வழங்குவதற்காக பெற்றோரை இழந்த அல்லது ஒரு பாதுகாவலர் உள்ள நகரப்புற ஏழைச் சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கும் வேலைத் திட்டம் எமது அமைச்சினால் மேற்கொள்ளப்படுகிறது.

இதன்மூலம் குறைவான வசதிகளையுடைய சிறுவர்கள் கற்பதற்கான வசதியினை வழங்குவதன் மூலம் அவர்களை கல்வியில் ஈடுபடச்செய்வதன் மூலம், சமூகத்தில் துன்புறுத்தலுக்கு உள்ளாகியுள்ள குழுக்களின் அறிவு, மனப்பாங்குத் திறன் மூலம் அவர்களை சமூகமயப்படுத்துவது உறுதியாகும். 2018ம் வருடம் பாடசாலைச் சிறுவர்கள் 23077 பேருக்கு பாடசாலைச் சீருடை மற்றும் புத்தகத் தொகுதி என்பன வழங்கப்பட்டுள்ளன. மேலும், எமது நாட்டில் வாழுகின்ற ஓரங்கட்டப்பப்பட்ட நிலைமைக்கு உள்ளாகியுள்ள இனப் பிரிவுகளுக்காக அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு நிதிப் பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், சுதந்திரமிக்க நாடு ஒன்றுக்காக செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களில் பௌத்த வழிபாட்டுப் புத்தகத்தினை வழங்குவதானது மிகவும் விசேட முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். இதன் மூலமும் அமைச்சின் தகவலினை மக்களிடத்தில் பிரபல்யப்படுத்துவது இதன் நோக்கமாகும். அதன்பிரகாரம் மதச் சகவாழ்வினை ஏற்படுத்தும் குறிக்கோளானது கூடுதலான தினங்களில் ஒழுக்க நெறிச் சீலர்களுக்காக இந்தப் புத்தகம் வழங்கப்பட்டுள்ளது. களனி, கண்டி ஸ்ரீ தலதா மாளிகை, பாமன்கடை ஸ்ரீ மஹா விகாரை, அனுராதபுரம் ருவான்வலிசாய, கதிர்காமம் அறநெறிப் பாடசாலை போன்ற மதத் தலங்களில் ஒழுக்கநெறியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.





அவ்வாறே அவிசாவளை பென்றிக்வத்தை கீழ்ப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேறிய வாயுவினால் பாதிப்படைந்தவர்களுக்காக உதவி வழங்கப்படவுள்ளது. அவ்வாறு பாதிப்படைந்த 47 குடும்பங்களுக்காக பொருத்தமான இடம் ஒன்று வழங்கப்படவுள்ளது. இதுவரைக்கும் அதற்குரிய பொருத்தமான இடம் ஒன்றினை பெற்றுக்கொள்வதற்காக அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

### 3.2.5. சட்ட ஆவணங்களைப் பெற்றுக்கொடுக்கும் நடமாடும் சேவை

இன பேதமின்றி அனைத்து இலங்கையர்களினது மத்தியில் பரஸ்பர நம்பிக்கையினை கட்டியெழுப்புவதற்காக சமூகத்திலே வசதி குறைவான குழுவினருக்கு சம சந்தர்ப்பத்தினை வழங்குவதன் மூலம் பிரஜையாக சமூகத்தில் வாழ்வதற்குத் தேவையான அடிப்படைச் சட்ட ஆவணங்களைப் பெற்றுக்கொடுப்பதே இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

இதற்காக பதிவாளர் நாயகம் திணைக்களம், மனித உரிமைகள் ஆணைக்குழு, அரசகரும மொழிகள் ஆணைக்குழு, ஓய்வூதியத் திணைக்களம், இலங்கை பொலிஸ், பிரதேச செயலகம், ஊழியர் சேமலாப நிதி திணைக்களம், சட்ட உதவி ஆணைக்குழு, இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை மின்சார சபை, நகர சபை, தேசிய அடையாள அட்டைப் பிரிவு, பொலிஸ், சமாதான நீதவான் மற்றும் பிரதேச செயலகம் போன்ற அரச நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படும் உத்தியோகத்தர்கள் சமூகமளித்திருந்தனர்.

ஒரே இடத்தில் இந்த அனைத்துச் சேவைகளும் பொதுமக்களுக்கு குறைவின்றி பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் வழங்கபட்டுள்ளதுடன் இந்தச் சேவைகள் அனைத்தும் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படும். உதாரணமாக தேசிய அடையாள அட்டைக்குத் தேவையான புகைப்படம் மற்றும் முத்திரை, பிறப்பு, விவாகம் மற்றும் மரணச் சான்றிதழ் போன்றவற்றுக்கான அறவீடுகள் மற்றும் புதிய விவாகப் பதிவுகள் அறவீடுகள் எதுவுமின்றி மேற்கொள்ள முடியும்.

இதன் மூலம் பொதுமக்களினது நேரம் மற்றும் மனித சக்தி போன்றன குறைக்க முடிவதுடன் பிரஜையாக தனது அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் அடிப்படை ஆவணங்களான தேசிய அடையாள அட்டைக்கு உரிமை பெறுவதன் மூலம் அவர்கள் சமூகமயப்படுத்தப்படுவார்கள். இங்கே பெற்றுக்கொள்ளப்படும் சேவைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- பிறப்புச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளுதல், காலம் கடந்த பிறப்பினை பதிவு செய்தல், திருத்தம் செய்தல், அனுமான வயதுச் சான்றிதழ் போன்றவற்றை வழங்குதல்
- புதிய விவாகம் பதிவு செய்தல்

  இங்கே திருமணமாகாமல் ஒன்றாக வாழுபவர்களுக்காக இலவசமாக திருமணப் பதிவு செய்யப்படும்.
- தொலைந்துபோன அடையாள அட்டைக்காக பொலிஸ் அறிக்கை இலவசமாக வழங்கப்படும்
- சமாதான நீதவானால் சான்றிதழ் வழங்கப்படும்
  இங்கு தேசிய அடையாள அட்டை மற்றும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ்களுக்குரிய சத்தியப் பிரமாணம் வழங்கப்படும்.
- முதியோர் அடையாள அட்டை வழங்கப்படும்
  சிரேஷ்ட பிரஜைகளுக்காக புகைப்படம் இலவசமாக வழங்கப்படுவதுடன் முதியோர் அடையாள அட்டை வழங்கப்படும்.

- தமக்கு தேவையான மொழியில் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) பிறப்பு/ இறப்பு/ விவாகம் போன்ற சட்ட ஆவணங்களை மொழி பெயர்த்தல்
- ஊழியர் சேமலாப நிதி தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல்
- நீர்க் கட்டணம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல்
- சட்ட உதவி வழங்குதல்
- மின்சாரம் தொடர்பான பிரச்சினைகள்.
- நகரசபை மதிப்பீட்டு வரிப் பிரச்சினைகளுக்கான மதிப்பீட்டுப் பிரிவின் சேவையை வழங்குதல்.





2018 ஆம் வருடத்தில் சட்ட ஆவணங்களைப் பெற்றுக்கொடுக்கும் நடமாடும் சேவை 14 வேலைத் திட்டத்தின் மூலம் 12688 பேருக்கு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. மொனராகலை, நுவரேலியா, மாத்தறை, மட்டக்களப்பு, மன்னார், மாத்தளை,களுத்துறை, புத்தளம்,

கிளிநொச்சி, இரத்தினபுரி, முல்லைத்திவு, கண்டி, மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களிலுள்ள மக்களுக்காக இந்த வசதிகள் 2018ம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளன. இந்த சேவைகளின் ஊடாக அந்தந்தப் பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் மக்களுக்காக பாரிய சேவை வழங்கப்பட்டுள்ளதுடன் அவர்களை வலுவூட்டுவதன் ஊடாக சகவாழ்வு மேம்பாடடைய செய்ய முடியும்.

### 3.2.6. பொதுமக்களுக்காக இனவிவகார பன்மைத்துவம் தொடர்பாக விழிப்புணர்வூட்டுதல்

1. **பெயர்ப்பலகை தயாரித்தல்**

தேசிய முக்கியத்துவம் மிக்க தகவல் தொடர்பினை மேற்கொள்வதற்காக பிரச்சாரப் பலகை ஊடகமாக்குவதற்கு உள்ளூராட்சி மன்றத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் காட்சிப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் 25 மாவட்டங்களையும் உள்ளடக்குமுகமாகும் வகையில் ( மேல் மாகாணம் 12, சப்ரகமுவ – 2, வடக்கு – 6, வடமத்திய மாகாணம் - 3, மத்தி – 2, கிழக்கு – 3, வயம்ப மாகாணம் - 2) 30 இடங்களில் நிறுவுவதற்குரிய நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2. **கலாசார பன்மைத்துவ பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டம்**

பல்லின மக்கள் வாழும், பன் மதங்களையும் வழிபடும் நாடு , பல் கலாசார நாடு ஒன்றாகும். இந்தப் பன்மைத்துவமானது எமது சக்தியாகும். பரஸ்பர நம்பிக்கையை கட்டியெழுப்புவது, ஒருவருக்கொருவர் மதிப்புக் கொடுத்தல், சகவாழ்வு நிறைந்த சமூகம் ஒன்றாக கட்டியெழுப்புவதற்காக நாம் அனைவரும் ஒன்றோடு ஒன்றாக இணைந்துகொள்ள வேண்டும். பொருளாதாரம், கல்வி, சமூகம், மதம் மற்றும் சுற்றுச்சூழல் உட்கட்டமைப்பு வசதிகளில் அபிவிருத்தி இன்மை போன்ற சகவாழ்வினை பாதிப்படையச் செய்யக்கூடியது. அதன் காரணத்தினால் இவ்வாறான வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக நிதி மற்றும் பொருள் ரீதியாக அனுசரணை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமானது எமது அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பல்வேறு மத நிகழ்வுகளுக்கும் அனுசரணை வழங்குதல்.

### 3.2.7. பொதுமக்கள் அழைப்பு முறைமை



அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தல், அதற்கான வசதிகளை வழங்குதல் மற்றும் மொழியைக் கற்றுக்கொள்ளுதல் என்பன தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளில் பிரதான இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.



அதன்பிரகாரம் பாடசாலை மாணவர்கள் மற்றும் பாடசாலையை ஊக்குவிப்பதனை நோக்கமாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலை சிலவற்றுக்கு கேட்டல் ஒலிபரப்புச் சாதனங்கள் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு அவ்வாறான 90 உபகரணப் பொதிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் இதுவரைக்கும் 77 பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.


**3.2.8.க.பொ.த சாதாரண தரத்தில் இரண்டாம் மொழியில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டுதல்.**




அரசகரும மொழிக் கொள்கை பயிற்சி நடைமுறைப்படுத்தும் நோக்கில் அமைச்சின் கீழ் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், இலங்கை வானொலிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து ‘தெரிந்தால் கற்பியுங்கள் தெரியாவிட்டால் கற்றுக்கொள்ளுங்கள்’ என்ற வானொலி நிகழ்ச்சியினை கேட்டு 2017 ம் வருடத்தின் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் இரண்டாம் மொழியில் கற் று விசேட சித்தியடைந்த மாணவ மாணவிகளுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வானது 2018.07.26ம் திகதி சுகதாச உள்ளக விளையாட்டரங்கில் அதிமேதகு ஜனாபதி மைத்திரிபால சிரிசேன அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இ ங்கு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரண்டாம் மொழியைக் கற்றுக்கொண்ட பாடசாலை சிறுவர்கள் 3791 க்காக பாடசாலை சீருடைத்துணி மற்றும் புத்தகத் தொகுதி வழங்கப்பட்டுள்ளதுடன் பாடசாலை அதிபர்களுக்காகவும் ஆசிரியர்களுக்காகவும் விருது மற்றும் பரிசு என்பன வழங்கப்பட்டுள்ளது.

**செயற்திட்டத்தின் படியான செயலாற்றுகை**

**சகவாழ்வு, கலந்துரையாடல்கள் பிரிவுக்கான நிதி முன்னேற்றம்**




| தொ. இல | விபரம் | உத்தேசிக்கப்பட்ட தொகை (ரூபா) | உண்மைச் செலவு (ரூபா) | விகிதம் |
|---|---|---|---|---|
| **01** | சகவாழ்வு சங்கங்களை பதிவுசெய்தல் மற்றும் கருத்திட்டத்தினை அமுல்ப்படுத்தல் | 9.37 | 9.37 | 100% |
| **02** | சகவாழ்வினை மேம்படுத்துவதற்கான வானொலி மற்றும் வேறு ஊடக நிகழ்ச்சித்திட்டம். | 16.92 | 16.92 | 100% |
| **03** | கலை மற்றும் கலாச்சாரத்தின் மூலம் சகவாழ்வினை முன்னேற்றுதல் | 3.16 | 3.15 | 100% |
| **04** | இனவிவகார பன்மைத்துவம் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 8.25 | 4.27 | 52% |
| **05** | நடமாடும் சேவை | 12.34 | 12.34 | 100% |
| **06** | ஓரங்கப்பட்ட நிலைக்குள்ளான குழுவினரை உயர்நிலைக்கு கொண்டு செல்லல் | 5.72 | 5.72 | 100% |
| **07** | க.பொ.த சாதாரண தரத்தில் இரண்டாம் மொழியில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டுதல். | 16.24 | 16.24 | 100% |
| **08** | மாவட்ட நல்லிணக்க குழு | 40. | 31.17 | 78% |
| **09** | 2017 ஆம் ஆண்டிற்கான பொறுப்புக்கள் | 28.00 | 28.00 | 100% |
| | **மொத்தம்** | 140.00 | 127.18 | 91% |

### 3.3. நிர்வாகப் பிரிவு

**அறிமுகம்**

அமைச்சில் சிறந்த காரியாலய நிர்வாக சூழலை கொண்டு நடாத்தல், மனித மற்றும் பௌதீக வளங்களை முகாமை செய்தல், உத்தியோகத்தர்களது வேலை தொடர்பான தேவைகளை பூர்த்தி செய்தல், மற்றும் அமைச்சின் சேவைகளை அமுல்படுத்துவதற்கு உதவி புரிதல் போன்றன நிர்வாகப் பிரிவின் பிரதான நோக்கங்களாகும்.

**நிர்வாகப்பிரிவின் நடவடிக்கைகள்**

- அமைச்சின் உள்ளக நிர்வாகம்.
- அமைச்சின் கீழு இணைந்துள்ள நிறுவனங்களை ஒருங்கிணைத்தல்
- பதவி அனுமதி பெறல்.
- ஆட்சேர்ப்பு திட்டங்களை உருவாக்கள்.
- நியமனம், இடமாற்றம், பதவி உயர்வு தொடர்பான நடவடிக்கைகள்.
- தனியார் கோவை நடாத்துகை.
- ஒழுக்கம் தொடர்பான நடவடிக்கைகள்.
- பயிற்சி நடவடிக்கைகள்.
- கட்டிடம், வாகனம் உள்ளடங்களாக அனைத்து பௌதீக வளங்களினதும் நடாத்துகை.
- பாராளுமன்ற உபதேச செயற்குழுவினை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- அமைச்சரவைப் பத்திரிகை தயாரித்தல்.

**கிளிநொச்சி மாகாண மைய நிலையத்தை அபிவிருத்தி செய்தல்**

இந்த அமைச்சின் பணிகள் மாகாண மட்டத்தில் செயற்படுத்துவதற்காக கிளிநொச்சி மைய நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு 2016ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

அதற்காக 2018/12/31 வரை செலவிடப்பட்ட மொத்த செலவு ரூபா.மில்லியன் 49.00 ஆகும். 2018 ஆம் ஆண்டு ரூபா.மில்லியன் 18 செலவில் மாகாண மைய நிலையத்திற்கு தேவையான தளபாடங்கள் உபகரணங்களை கொள்வனவு செய்தல், குளிரூட்டி வசதிகளை வழங்கள், விடுதி வசதிகள் அபிவிருத்தி, உள்ளக வீதி அபிவிருத்தி மற்றும் மொழி ஆய்வகத்திற்கான கணனி கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டு மைய நிலையம் 2018.07.30ஆம் திகதி திறக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டிற்குள் அரச உத்தியோகத்தர்களுக்கான மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 16 உம் இளைஞர் குழுக்களுக்கான மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 06 உம் ரூபா.மில்லியன் 2.76 செலவில் நடாத்தப்பட்டது.

**2018 ஆம் ஆண்டில் உள்ளூர் பயிற்சியில் பங்குபற்றியோர்**

| இலக்கம் | பயிற்சியின் பெயர் | நிறுவனம் | கட்டணம்(ரூபா) |
|---|---|---|---|
| 01 | கொள்முதல் நடவடிக்கைகள் கணக்காய்வு தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் | Prag Institute | 14000.00 |
| 02 | கொள்முதல் நடவடிக்கைகள் தொடர்பான சான்றிதழ் பாடநெறி | தேசிய தொழில் கல்வி நிறுவனம் | 13000.00 |
| 03 | Bid Evaluation in Public Procurement | மிலோதா நிறுவனம | 18000.00 |
| 04 | தமிழ் மொழி டிப்ளோமா | களனி பல்கலைக்கழகம் | 45000.00 |
| 05 | அலுவலக அமைப்புகள் மற்றும் நடைமுறை விதிகள் | அமைச்சின் கேட்போர் கூடம் | 66320.00 |
| 06 | Diploma in English | SLIDA | 20000.00 |
| 07 | இசை பதில்இ இசை மற்றும் மகிழ்ச்சி நிகழ்ச்சித்திட்டம் | அமைச்சு | 133050.00 |

**2018 ஆம் ஆண்டில் பங்குபற்றிய வெயிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

| இலக்கம் | பயிற்சியின் பெயர் | பயிற்சியளிக்கப்படும் நிறுவனம் / நாடு | செலவு |
|---|---|---|---|
| 01 | International Programme on Management Auditing for the public sector | மலேசியா | 188,600+USD1088.5 |
| 02 | Seminar on Belt and Road Initiative Coorperation between China and Other Asian Country | சீனா | USD800+பவுண் 75 |
| 03 | International Programme of Planning, Implementation, Monitoring & Evaluation | மலேசியா | 180,000+USD983+13 000 |
| 04 | PIM International Management Programme | இந்தோனேசியா | USD 1088 |
| அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம் | | | |
| 05 | ஆசிய பசிபிக் பிராந்திய நிதி தொடர்பான 21வது வருட மாநாடு மற்றும் தொழில்நுட்ப கருத்துக்களம் | கத்மண்டு- நேபாளம் | 92100+USD 2880 |
| 06 | கொள்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | மலேசியா | USD 280 |

**2018ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட உள்நாட்டுப்பயிற்சி நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்கள்**

| இலக்கம் | பயிற்சியின் பெயர் | பயிற்சியளிக்கப்படும் நிறுவனம் / பயிற்சியளிக்கும் நபர் | செலவு |
|---|---|---|---|
| 01 | Seminar on "Revised Fire Regulations for Construction Industry " | Construction Industry Development Authortiy | **ரு.4,000.00** |
| 02 | தேசிய நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தொனிப்பொரு பயிற்சி நிகழ்ச்சி | GIZ | **ரு.23,849.00** |
| 03 | அலுவலக முறைமை | திரு.எம்.கே.டபிளியு விக்ரமரத்ன | **ரு.13,860.00** |
| 04 | Transitional Justice | புனரமைப்பு முறைமை தொடர்பான ஒருங்கிணைப்பு அலுவலகம் | **ரு.31,185.00** |
| 05 | தலைமைத்துவம் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | ஊவா முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனம் - ஊவா மாகாண சபை | **ரு.423,602.32** |
| 06 | அலுவலக நடைமுறை விதி | திரு.எம்.கே.டபிளியு விக்ரமரத்ன | **ரு.13,600.00** |
| 07 | Computeried Government Payrool System | Miloda - Academy of Financial Studies | **ரு.36,000.00** |

**2018ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்கள்**

| இலக்கம் | பயிற்சியின் பெயர் | பயிற்சியளிக்கப்படும் நிறுவனம் / பயிற்சியளிக்கும் நபர் | செலவு |
|---|---|---|---|
| 01 | Intenational Programme on Management Kasetsart Univversity,Bangkok | Bangkok | பாடநெறி கட்டணம் ரு.**210,000.00**<br>சாதாரண கொடுப்பனவு – அ.டொ.**320**<br>இணைந்த கொடுப்பனவு **-** அ.டொ **.784** |
| 02 | **2018** Seminar on Ethnic policy & Road Initiative from 25th May to 13 th June 2018 | China | சாதாரண கொடுப்பனவு **-ඇ.ඩො.** 840 |
| 03 | Intenational Programme on Management Univversity of Gadjah mada | Indonesia | பாடநெறி கட்டணம் ரு.**500,000.00**<br>சாதாரண கொடுப்பனவு **-** அ.டொ **.560**<br>இணைந்த கொடுப்பனவு அ.டொ **.1617** |
| 04 | Glodal Reparations Summit 25-26 March 2018 | Serbia | **අතියම් දීමනා - ඇ.ඩො.600** |

### 3.4. திட்டமிடல் பிரிவு
### அறிமுகம்

திட்டமிடல் பிரிவானது, தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் பிரதான பிரிவுகளில் ஒன்றாகும்.

அடையப்பெறும் பெறுபேறுகள், வினைத்திறன், விளைத்திறன் பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக துறைசார் அடிப்படையில் அமுல்படுத்தப்படும் கருத்திட்டம்/ நிகழ்ச்சித்திட்டம் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு என்பன திட்டமிடல் பிரிவில் மேற்கொள்ளப்படும். மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு உயர் முகாமைத்துவ, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுக்கு முன்வைக்கப்படும்.

**திட்டமிடல் பிரிவின் பிரதான பணிகளாவன:**

- அமைச்சின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம், வருடாந்த செயலாற்றுகைத் திட்டம் என்பவற்றை தயாரிக்க அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு.

- அமைச்சு அடையாளம் கண்டுள்ள முன்னோடி கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதனை ஒருங்கிணைத்தல்.

02. அரச சார்பற்ற அமைப்புக்களுக்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு செயற்பாடுகளின் பின்னூட்டல்கள் மேற்கொள்வது தொடர்பாக உள்ளக அமைச்சு / திணைக்களம் அணுகுமுறையை உபயோகப்படுத்தல்.

**நிகழ்ச்சித்திட்டங்கள் / செயற்பாடுகள்**

01. அரச சார்பற்ற அமைப்புக்களை வகைப்படுத்தல்

02. அரச சார்பற்ற அமைப்புக்களில் செயற்திட்டங்களிற்கு அமைய முன்னேற்றங்களை பின்விபரம் செய்தல்.

03. அரச சார்பற்ற அமைப்புக்களின் மேற்பார்வை தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்களை நடாத்துதல்

**முன்னேற்றம்**

பதிவு செய்யப்பட்ட அரச சார்பற்ற அமைப்புக்களை தேசிய செயலகத்திற்கு பிரதிபலிப்பை வெளிக்காட்டுவதன் பிரகாரம், 4 பிரிவுகளிற்கு வகுக்கப்பட்டுள்ளதோடு, வெளிநாட்டு நன்கொடைகள் பெறுகின்ற அரச சார்பற்ற அமைப்புக்களிற்கான மேற்பார்வை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கீழ் காணும் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

**அரச சார்பற்ற அமைப்புக்களை வகைப்படுத்தல்**

அரச சார்பற்ற அமைப்புக்களை பதிவு செய்யும் ஆவணத்திற்கமைய 1605 பதிவு செய்யப்பட்ட அரச சார்பற்ற அமைப்புக்கள் காணப்படுகின்றன. அவ்வரச சார்பற்ற அமைப்புக்களை வகைப்படுத்தலானது இக்காரியாலயத்திற்கு அறிக்கை முன்வைப்பதன் ஊடாக சார்ந்துள்ளதுடன், அதற்கிணங்க கீழ் குறிப்பிட்டுள்ளவாறு அரச சார்பற்ற அமைப்புக்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

01. 75% பார்க்கிலும் அதிகமாக பிரதிபலிப்பை வெளிக்காட்டும் அரச சார்பற்ற அமைப்புக்கள்
02. 50-75% இடையிலான பிரதிபலிப்பை வெளிக்காட்டும் அரச சார்பற்ற அமைப்புக்கள்
03. 50% பார்க்கிலும் அதிகமாக பிரதிபலிப்பை வெளிக்காட்டும் அரச சார்பற்ற அமைப்புக்கள்
04. பிரதிபலிப்பை வெளிக்காட்டாத அரச சார்பற்ற அமைப்புக்கள்

பிரதிபலிப்பை வெளிக்காட்டாத அரச சார்பற்ற அமைப்புக்கள் செயற்படுகின்றனவா இல்லையா என்பது பற்றி அறிந்துக்கொள்வதற்காக அலுவலகம் அல்லது தனிப்பட்ட முகவரிகளுக்கு கடிதங்கள் அனுப்புதல், தொலைபேசியில் தொடர்புகொள்ளுதல், மின்னஞ்சல் மூலம் தகவல்களை உறுதிப்படுத்துதல், மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் ஊடாக தகவல்களை ஆராய்தறிதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளில் அரச சார்பற்ற அமைப்புக்களில் கீழ் குறிப்பிட்டுள்ள தகவல்களை பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகள் இடம்பெறும்.

01. அமைப்புக்களால் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்கள் தொடர்பாக தகவல்களை பெறுதல்.
02. நன்கொடை பெறுதல் தொடர்பான தகவல்கள்
03. நன்கொடை செலவீனங்கள் தொடர்பான தகவல்கள்
04. பணிக்குழு தொடர்பான விபரங்கள்
05. சொத்து தொடர்பான விபரங்கள்
06. வருடாந்த கணக்காய்வு அறிக்கை

**மாவட்ட மேற்பார்வை நடவடிக்கைகள்**

அரச சார்பற்ற அமைப்புக்களில் மாவட்ட ரீதியான செயற்பாடுகளை கண்காணிப்பதற்காக மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளது. மாவட்ட கண்காணிப்பு நடவடிக்கைகள் சம்பந்தமாக 22 மாவட்டங்களுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக, தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பாக பெறப்படும் முறைப்பாடுகள் / மனுக்களை அடிப்படையாகக் கொண்டு கண்காணிப்பு பிரிவின் மூலம் அரச சார்பற்ற அமைப்புக்கள் சம்பந்தமாக விசாரணை நடவடிக்கைகள் நடத்தப்படுகின்றன. கண்காணிப்பு பிரிவின் உறுதிப்படுத்தலின் பேரில் தேவையேட்படின் அவ்வமைப்புக்கள் தொடர்பாக விரிவான விசாரணையொன்றிற்கு பரிசீலனை சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஊடாக அது போன்ற அடிப்படை விசாரணைகள் நடத்தப்பட்டு எதிர்கால செயற்பாடுகள் தொடர்பான ஆலோசனைகளை மேலதிக / உதவி பதிவாளர்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

**சிறு நிதி அரச சார்பற்ற அமைப்புக்களை பதிவு செய்தல் மற்றும் கண்காணிப்பு பிரிவு**

சிறு நிதி சட்டத்தின் கீழ் ஒழுங்குமுறை செயற்பாடுகளை மேற்கொண்டு வர்த்தமானியை வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரச சார்பற்ற அமைப்புக்களில் மாவட்ட ரீதியான செயற்பாடுகளை கண்காணிப்பதற்காக **மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கள்** நியமிக்கப்பட்டுள்ளது. மாவட்ட கண்காணிப்பு நடவடிக்கைகள் சம்பந்தமாக 11 மாவட்டங்களுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிறு நிதி அரச சார்பற்ற அமைப்புக்களை பதிவு செய்யும் செய்றபாடானது தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது அது போன்று 46 அமைப்புக்கள் பதிவு செய்வதற்காக விண்ணப்பித்துள்ளன. அவ்வமைப்பின் முன்னேற்றம் மற்றுமு் கண்காணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அவ்வனைத்து செயற்பாடுகளையும் முடிவுற்ற 13 அமைப்புக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சிறு நிதி சட்டம் மற்றும் அதன் ஒழுங்கு விதிகள் தொடர்பாக 25 மாவட்டங்களுக்கு சிறு நிதி ஒழுங்கமைக்களை தெளிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

தேசிய பயிர்ச்செய்கை முகாமைத்துவ நிறுவனத்தின் மூலம் செயற்படுத்தப்படும் சிறு நிதி தொடர்பான சான்றிதழ் பாடநெறிக்கு சகல மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களையும் ஈடுபடுத்தி பயிற்சி வழங்கிய அதேவேளை, மத்திய வங்கியில் வங்கி **விது பியச** கீழ் இடம்பெற்ற சிறு நிதி சங்கங்களில் செயற்பாடுகள், நிதி பேண் தகைமை, ஒழுங்கு விதிகள் மற்றும் இடர் முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பிரதான அலுவலக சிறு நிதி பிரிவு உத்தியோகத்தர்களை பயன்படுத்தி பயிற்சி வழங்கப்பட்டது.

நிதியறிவு தொடர்பான பயிற்சியாளர்களை பயிற்றுவித்தல் பற்றிய செயற்றிட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், மாவட்ட ரீதியாக சகல கிராம உத்தியோகத்தர்களுக்கும் நிதியறிவை பெற்றுக்கொடுக்கம் நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

**வசதியாக்கல் மற்றும் சேவை வழங்கல் பிரிவு**

**நோக்கம்**

1980 இலக்கம் 31 கொண்ட தன்னார்வ அமைப்புக்களை பதிவு செய்தல் மற்றும் கண்காணிப்பு சம்பந்தமான சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அரச சார்பற்ற அமைப்புக்கள் / தன்னார்வ அமைப்புக்களின் பெறுபேறுகளை தம்வசப்படுத்துவதற்காக சிறப்பாக பராமரிக்கும் பொருட்டு வழங்கக்கூடிய வசதியாக்கல் மற்றும் சேவை வழங்கல் ஆகியன இப்பிரிவின் நோக்கமாகும்.

வசதியாக்கல் மற்றும் சேவை வழங்கல் பிரிவின் ஊடாக வழங்கப்படும் சேவைகள் கீழ் வருமாறு:

1. விசா பரிந்துரை செய்தல் / தொழில் அனுமதிப்பத்திரம் விநியோகித்தல்
2. சுங்க வரி நிவாரண பரிந்துரைகளை வழங்குதல்
3. இறக்குமதி வரி நிவாரணம் தொடர்பான பரிந்துரைகளை வழங்குதல்
4. நிறுவன வரி நிவாரணம் தொடர்பான பரிந்துரைகளை வழங்குதல்
5. திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்
6. பிரதேச மற்றும் மாவட்ட சிவில் சமூக மாநாடுகளை ஸ்தாபித்தல் மற்றும் திறன் விருத்தி
7. அரச சார்பற்ற அமைப்புக்களில் ஏனைய வேண்டுகோள்கள் தொடர்பாக தலையிடுதல்.

**விசா / தொழில் அனுமதிப்பத்திரம் விநியோகித்தல்**

பதிவு செய்யப்பட்ட அரச சார்பற்ற அமைப்புக்களில் பணியாற்றும் வெளிநாட்டவர்களுக்குத் தேவையான விசா பரிந்துரைகள் மற்றும் தொழில் அனுமதிப்பத்திரங்களை இப்பிரிவின் ஊடாக இடம்பெறுகின்றது. உள்நாட்டு நிர்வாக அமைச்சினால் வெளியிடப்பட்ட 01/2008 விசா சுற்றிக்கையில் ஒழுங்கு விதிகளின் படி அரச சார்பற்ற அமைப்புக்களில் சேவை சம்பந்தமாக வருகைத்தரும் வெளிநாட்டவர்களுக்கு நாட்டினுள் பிரவேசிக்கும் வீசா மற்றும் வதிவிட வீசா வழங்குதல் மற்றும் நீடிப்பு செய்தல் தொடர்பாக குடிவரவு குடியகழ்வு நிர்வாகிக்கு பரிந்துரை செய்யப்பட்டது. அப்போது, பரிந்துரை வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் உரிய மாவட்ட செயலாளரின் ஒப்புதல் பெறுவனவு இடம்பெறும். மேலும், குறுகிய கால சேவை சம்பந்தமாக வருகைத்தரும் தன்னார்வ சேவையாளர்கள் போன்று கூட்டங்கள், கலந்துரையாடல் மாநாடுகள் போன்றன தொடர்பாக வருகைத்தரும் வெளிநாட்டவர்களுக்கு குறுகிய கால வீசா பரிந்துரைகள் வழங்கப்படும்.

**2018.01.01** ஆம் திகதி முதல் **2018.12.31** காலவரையறையினுள் **383** வெளிநாட்டவர்களுக்கு வதிவிட வீசாவும், **368** நபர்களுக்கு குறுகிய கால வீசா பரிந்துரைகள் மற்றும் 58 வெளிநாட்டவர்களுக்கு தொழில் அனுமதிப்பத்திரங்களும் விந்யோகிக்கப்பட்டுள்ளன.

**நிறுவன வரி நிவாரணம் தொடர்பான பரிந்துரைகளை வழங்குதல்**

வறிய மற்றும் தேவைகளுடன் கூடிய நபர்களுக்கு வழங்குவதற்காக அரச சார்பற்ற அமைப்புக்களால் வெளிநாடுகளில் இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களுக்கு சுங்க வரிச்சலுகையை பெறுவதற்காக பரிந்துரைகளை முன்வைத்தலானது வசதியாக்கல் மற்றும் சேவை வழங்கல் பிரிவினால் இடம்பெறும். சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதும், இவ்வலுவலகத்தில் கண்காணிப்பு பிரிவு மற்றும் மேற்பார்வை பிரிவின் தேவைகளை பூரணப்படுத்திய அமைப்புக்கள் மாவட்டச் செயலாளரின் பரிந்துரைக்கு அமைய சுங்க வரிச் சலுகை வழங்கபடவுள்ளது.

**பிரதேச மற்றும் சிவில் சமூக மாநாடுகள்**

பிரதேச ரீதியாக 332 சிவில் சமூக மாநாடுகள் மற்றும் 25 மாவட்ட ரீதியான சிவில் சமூக மாநாடுகள் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ள அதேவேளை, 2018.12.31 ஆம் திகதிக்கு 263 பிரதேச சிவில் சமூக மாநாடுகள் மற்றும் 24 மாவட்ட சிவில் சமூக மாநாடுகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, அவ்வமைப்புக்களின் உயர் அதிகாரிகளான தலைவர், செயலாளர் மற்றும் உப குழு உத்தியோகத்தர்களை தெளிவூட்டுவதற்குரிய செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளது.

மேலும், சிறுவர் அமைப்புக்கள், மனிவள உரிமைகள் மற்றும் ஜனநாயகம், சகவாழ்வு, போதை பொருள் ஒழிப்பு மற்றும் பெண்கள் அபிவிருத்தி தொடர்பான உபகுழுக்கள் பற்றி அறிவூட்டுவதற்கு உரிய செயலமர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோன்று, மாவட்ட திறன் அபிவிருத்தி தொடர்பான உபகுழு பற்றி தெளிவூட்டும் பல்வேறு நிகழ்ச்சிகள் தற்போது வரை நடாத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று, மாவட்டம் மற்றும் பிரதேச ரீதியாக வெவ்வேறாக சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது.

**அலுவலகத்தின் இணையத்தளம்**

அரச சார்பற்ற அமைப்பு தொடர்பான தேசிய செயலக இணையத்தளம் www.ngosecretariat.gov.lk ஆகும். அதனூடாக அரச சார்பற்ற அமைப்புக்களின் பதிவுகள், கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை, சட்ட ரீதியான விபரங்கள், செய்திகள், விசேட நிகழ்ச்சிகள் ஆகியன தொடர்பான விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

# 08.தேசிய ஒருமைப்பாட்டிற்கும், நல்லிணக்கத்திற்குமான அலுவலகம்

**அறிமுகம்**

*தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகமானது* (ONUR) *கௌரவ பிரதம மந்திரியால் 2015 மார்ச் மாதம் 25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு 2015 ஏப்ரல் மாதம் 08 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் படி அதி மேதகு ஜனாதிபதியால் நிறுவப்பட்டது.*

*2015.12.08 ஆம் திகதிய* 1945/41*ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக முன்னேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சின் கீழ் நல்லிணக்கம் தொடர்பான நடவடிக்கைகள்* ONUR *ற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2018 இல்* ONUR *இன் செயற்பாடுகள் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது .*

*தற்போது 2015.12.08 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக முன்னேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சின் அமுல்படுத்தும் முகவராக அவர்களது பணிக்கூற்றை செயல்படுத்தல்* ONUR *ற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.*

**தேசிய ஒற்றுமைக்கான வீதி வரைபடம்**

*இலங்கையின் சூழலில் தேசிய ஒற்றுமையை அடைவதற்கு பல அம்ச அணுகுமுறை முக்கியமானது. இந்த விடயத்தில் இலங்கையில் தேசிய ஒற்றுமை, நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் செயற்பாடு, வடக்கு, தெற்கு, கிழக்கு அல்லது மேற்கு என எந்த இடத்தினை சேர்த்த மக்களினதும் வாழ்க்கையை பாதிக்கும் பல அம்சங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது என* ONUR *நம்புகிறது .*

*தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை கட்டமைப்பதற்கான கொள்கைகள் மற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும்* ONUR *இனது பொறுப்பாகும். இலங்கையில் உள்ள அனைத்து மக்களுக்கும் இடையிலான பாலங்களை நிர்மாணிப்பதன் மூலம் ஒரு நீடித்த சமாதானத்தை உறுதிப்படுத்துவதே ஓஎன்யூஆர் இன் பிரதான பங்காகும்.*

*திட்டங்களுக்கு கருத்தமைவளித்து வடிவமைத்து, நிதியுதவியை பெற்று முகவர்களுடன் இணைந்து* ONUR *செயல்படுத்துகிறது மத்திய அரசு, மாகாண சபைகள், சிவில் சமூக அமைப்புக்கள், அபிவிருத்தி பங்குதாரர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்கள் இதனது பங்காளர்களாவார்கள்.*

**தூரநோக்கு**

*பலமிக்கதும் உறுதியானதும், முன்னேற்றமானதும் யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அமைதியான நாடொன்றினைக் கட்டியெழுப்பி, இங்கு வாழும் சகல இலங்கையரும் ஒற்றுமையுடனும் பன்மைத்துவத்திற்கும் தேசிய அடையாளத்துவத்திற்கும் மதிப்பளித்து அதற்கு உத்தரவாதமளிப்பதுடன், ஒவ்வொரு பிரசையும் தனது பொருளாதார சமூக கலாசார மற்றும் அரசியல் ரீதியாக சமமான சந்தர்ப்பத்தினை பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற வகையில் செயற்படுதல்*

**பணிக்கூற்று**

*அடிப்படை உரிமைகளை மதிக்கும், சட்டவிதிகள், சமத்துவம் மற்றும் பன்மைத்துவத்தினைப் பாதுகாத்து, சகல பிரசைகளும் தமது இனம், சமயம், மொழி, சாதி, வயது, பால், பாலினம், பிறப்பிடம் மற்றும் அரசியல் கொள்கைகள் என்பவற்றினை வேற்றுமையாகக் கொள்ளாது கௌரவமாக வாழ்வதற்குத் தேவையான சமூகம் ஒன்றினை மேம்படுத்தல்.*

*குறிக்கோள்கள்*

i. *பல்வேறு சமூகங்களினுள்ளேயும் அவற்றிற்கிடையேயும் பதற்ற நிலையையும் மோதல்களையும் உருவாக்கும் பிரச்சினைககளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கத்திற்குப் பரிந்துரைத்தலும் அவை நடைமுறைப்படுத்தப்படுவதனைக் கண்காணித்தலும்.*

ii. *சகல சமூகங்களினிடையேயும் புரிந்துணர்வு, நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமையைக் கட்டியெழுப்பக் கூடிய நிகழ்ச்சிகளை உருவாக்கி அவற்றை அரசாங்கத்திற்குப் பரிந்துரைத்து அதன் பின்னர் அவை நடைமுறைப்படுத்தப்படுவதனைக் கண்காணித்தல்.*

***தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலக ஆளுகை சபை :***

*இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க அம்மையார் ONUR இன் தலைவராகவும், தமது தொழில் வாழ்க்கையில் சிறந்து விளங்கிய பல மத, இன, தொழில் மற்றும் கல்வி பின்னணியை சார்ந்த பின்வரும் பிரதிநிதிகள் ஆளுகை சபையின் உறுப்பினர்களாகவும் செயற்பட்டு வருகின்றனர்.*

*ONUR இன் ஊழியர்கள் பல்வேறு பின்னணியையும், நல்லிணக்கத் துறையில் தொழில்சார் அனுபவங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.*

*பின்வரும் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்சிகள் 2018 ஆண்டு காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.*

- *இலங்கை, தேசிய நல்லிணக்க கொள்கை*
- *சமூக ஒத்துழைப்புக்கான கல்வி*
- *முரண்பாட்டு நிலைமாற்றம்*
- *உளவியல் உதவித் திட்டம்*
- *நல்லிணக்கத்திற்கான கலை மற்றும் கலாச்சாரம்*
- *பொதுமக்கள் விழிப்புணர்வு மற்றும் மற்றவர்களுக்கு கொண்டு செல்லல்*
- *பரந்த மாவட்ட அபிவிருத்தி திட்டத்தின் (DDP) கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பொருளாதார ஈடுபாட்டுத் திட்டம்*

*இத்திட்டங்கள் மற்றும் நிகழ்சிகள் ஊடாக அரசாங்க அதிகாரிகள் ,சிவில் சமுதாய பிரதிநிதிகள், நிதிவழங்குநர் சமூகம் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச அமைப்புக்களின் ஆதரவுடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள ஆயிரக்கணக்கான மக்களின் இதயங்களை வென்றதன் தேசிய நல்லிணக்க மூலோபாயத்தில் முக்கிய பங்களிப்பை ஓஎன்யூஆர் வழங்கியுள்ளது.*

***2018 ற்கான நிதி ஒதுக்கீடு***

| தொ இ | வகை | நிதி மூலம் | ஒதுக்கீடு (மில்லியன் ரூபாய்கள்) | செலவு (மில்லியன் ரூபாய்கள்) | நிதியியல் செயலாற்றுகை (%) |
|---|---|---|---|---|---|
| 01 | மீண்டெழும் | வரவு செலவுத் திட்டம் | **30.00** | **28.54** | **95.13** |
| 02 | மூலதனம் | வருடாந்த வரவு செலவுத் திட்டம் ( நல்லிணக்க பொறிமுறைகளை ஒருங்கிணைக்கும் செயலகத்திற்கான(SCRM) ஒதுக்கீட்டுடன் ) | 1522.00 | 1173.94 | 77.07 |
| 2.1 | | வரவு செலவுத் திட்ட முன்வைப்பு | 500.00 | 221.55 | 44.31 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2.2 | | இந்திய அரசால் வழங்கப்பட்டது | 164.00 | - | - |
| 2.3 | | இந்தியாவால் வழங்கப்பட்ட திட்டத்திற்கான செயல்பாட்டு செலவு (வருடாந்த வரவு செலவுத் திட்டம்) | 25.00 | 3.38 | 13.52 |
| 2.4 | | சமய விழாக்கள் தொடர்பில் வடிவமைத்து அச்சிட்ட கையேடு - அமெரிக்காவால் வழங்கப்பட்டது | 8.47 | 8.47 | 100.00 |
| | | மொத்தம் | **2249.47** | **1435.88** | **63.83** |

**தேசிய நல்லிணக்க கொள்கை**

*தேசிய ஒத்துழைப்புக் கொள்கையை அபிவிருத்தி செய்வதற்கான செயல்முறை 2015 செப்டம்பர் இல் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தால் (*ONUR*) தயாரிக்கப்பட்டது.*

**தேசிய கொள்கையை தயாரித்தல்**




*அரசாங்க அதிகாரிகள், அமைச்சுக்கள் , திணைக்களங்கள், மாகாண சபை உறுப்பினர்கள் , சிவில் சமுதாயம், கல்வியியலாளர்கள் , வல்லுநர்கள் மற்றும் அடிமட்ட ஆர்வலர்கள் உள்ளிட்ட பல பங்குதாரர்களுடன் ஒருவருட விரிவான கலந்துரையாடல் செயற்பாடுகளுக்குப் பின்னர், தேசிய நல்லிணக்கக் கொள்கை 2016 செப்டம்பர் இல் அதிமேதகு ஜனாதிபதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால்அமைச்சரவை விவாதத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.அமைச்சரவைக்கு அவர் வழங்கிய குறிப்பில், "முழு அரசாங்கத்தின் முயற்சியையும், பல பங்குதாரர்களின் பாரிய முயற்சிகளையும் பிரதிபலிக்கும் விதத்தில்"* ONUR *தேசிய கொள்கையை தயாரிப்பதாக குறிப்பிட்டார்.*

ONUR *பங்குதாரர்களுடன்மேலதிக கலந்துரையாடல்கள் மற்றும் ஆலோசனைகளை நடத்தியதுடன், 'தேசிய நல்லிணக்க கொள்கை மற்றும் ஒருமைப்பாட்டின் திருத்தப்பட்ட இறுதிப் பதிப்பு'இணைந்த அமைச்சரவை பத்திரமாக அதிமேதகு ஜனாதிபதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக முன்னேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் கௌரவ மனோ கணேசன் ஆகியோரால் அமைச்சரவையின் செயற்படுத்தலுக்காக 2017 மே 2 இல் மீளவும் அனுப்பப்பட்டது.*

***02. சமூக ஒத்துழைப்புக்கான கல்வி***

*நீண்டகாலம் நிலைக்கக்கூடிய சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்காக இலங்கையின் சிறுவர்கள் மத்தியில்.சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவித்தல்,ஏனைய கலாச்சாரத்தை புரிந்து கொள்ளல்,பொறுப்பு,தகைமைஉணர்வு,சமூக ஒற்றுமை உணர்வு என்பவற்றை வளர்த்தலே திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.*

*அடைவு :*

- *9 மாகாணங்களில் 540 ஆசிரியர்கள் / அதிபர்கள் மற்றும் 900 மாணவர்களின் பங்களிப்புடன் 08 சகோதர பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்கள் (ஐந்து நாட்கள் வதிவிடப்பயிற்சிநெறி நடத்தப்பட்டது.*



- *300 மாணவர்களின் பங்கேற்புடன் 02 மாணவர் தலைமைத்துவ மாநாடுகள் நடாத்தப்பட்டன.*

- *பாடசாலைகளில் சமூக ஒத்துழைப்பு நடவடிக்கைகளில் பணியாற்றும் சங்கைக்குரிய பிக்குகள் மற்றும் மாகாண கல்வி அலுவலர்களுக்கு 02 உணர்வூட்டும் பயிற்சிநெறிகள் நடத்தப்பட்டன.*



- *கல்வி அமைச்சு மற்றும் 08 மாகாண கல்வி திணைக்களங்களில் சமாதான கல்வி மற்றும் நல்லிணக்க அலகு (PERU) நிறுவப்பட்டது.*

***03. முரண்பாட்டு நிலைமாற்றம் (இன நல்லிணக்க உரையாடல்)***

*முரண்பாட்டு நிலைமாற்றம் மூலம் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்காக இன நல்லிணக்க உரையாடல்கள்,இனங்களுக்கு இடையிலான, கலாச்சாரங்களுக்கு இடையிலான உரையாடல்கள் மிகவும் முக்கியமான மற்றும் வலுவான கருவிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.*

- *பல இன மற்றும் பல் கலாச்சார பிரதிநிதித்துவங்களுடன் பிரதிநிதித்துவங்களுடன் சமூக ஒற்றுமைக்கான செய்தியை வழங்குவதற்காக அடிமட்டத்தில் ஒரு மட்டத்தை உருவாக்குவதன் மூலம் நல்லிணக்க செயற்பாடுகளை வலுப்படுத்தல்.*
- *நல்லிணக்க செயற்பாட்டிற்கு யுத்த விதவைகளின் பங்களிப்புகளை பெறுவதற்கு அவர்களின் பொதுவான மற்றும் மறைக்கப்பட்ட விடயங்களை பற்றி பேசுதல்.*
- *முரண்பாட்டு மாற்றத்துடன் தொடர்புடைய செயற்பாடுகள் மற்றும் புதிய தொகுதிகள் மற்றும் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதன் ஊடாக உயர் கல்வித் துறையின் பங்களிப்பினை நல்லிணக்க செயல்முறையில் பெறுதல்.*

***அடைவு:***

***3. 1 கடந்த காலத்தை குணப்படுத்துவோம் : எதிர்காலத்தை உருவாக்குவோம்***

*23 அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சிவில் சமுதாய அமைப்புக்கள், தெரிவு சொயப்பட்ட அரசாங்க அதிகாரிகள் மற்றும் பங்காளர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் பங்களிப்புடன் அவர்களை நடைமுறைப்படுத்துபவர்களாக பயிற்றுவிக்கும் நோக்குடனும் பொதுமக்களுக்கு நல்லிணக்கம் தொடர்பிலான ஒரு நாள் விழிப்புணர்வு பயிற்சி வகுப்புகளை நடத்துவதன் மூலமாகவும் இந்த நிகழ்ச்சித்திட்டம் 17 மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்டது. மேலே உள்ள நிகழ்ச்சித்திட்டத்தின் பின்வரும் நடவடிக்கைகள் 2018 இல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.*

- *17 மாவட்ட செயலாளர்களுடன் சந்திப்பினை நடத்துதல்*
- *பங்காளர் நிருவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கைச்சாத்திடுதல்.*
- *224 பிரதேச செயலகங்களில் இருந்து பயிற்றுவிப்பாளர்களாக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தேர்வு செய்தல்*

- பயிற்சியாளர்களுக்கான பயிற்சிதாரருக்கான தொகுதி மீளாய்வு கருத்தரங்கை நடாத்துதல்

***3.2 உயர் கல்வித் நிகழ்ச்சித்திட்டம் ஊடான தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம்***

*இந்த திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட கல்வியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டதுடன் அவர்கள் பட்டதாரிகளுக்கு கருத்தரங்குகளையும் பிற செயற்பாடுகளையும் மேற்கொண்டார்கள்.*

- பல்வேறு பல்கலைக்கழகங்களின் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துதல்
- தொகுதி மீளாய்வு கருத்தரங்கு முடிக்கப்பட்டது
- மாணவர் மன்றம் முடிக்கப்பட்டது

***3.3 விருலிய சக்தி***



*இந்த திட்டமானது, இராணுவ விதவைகளின் பிரச்சினைகளை தீர்ப்பதை இலக்கு குழுவாக கொண்டு பல்வேறு அணுகுமுறைகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.சுகாதாரம், பொதுச் சேவைகள், சட்ட உதவி, வாழ்வாதார உதவி மற்றும் அவர்களுக்கான நிதி முகாமை ஆதரவு என்பன பல்வேறு அம்சங்களாகும்.*

- விதவைகளுடனான ஆரம்பக் கூட்டம் குருநாகல், அனுராதபுரம், காலி ஆகிய மூன்று மாவட்டங்களில் முடிவடைந்தது
- மேற்கூறப்பட்ட மாவட்டங்களின் உரிய அரசாங்க அதிபர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் 6 கூட்டங்கள் நடாத்தப்பட்டன
- பயிற்சியாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்கான தொகுதிகளை உருவாக்க நிபுணர் குழு கூட்டம்
- சுகாதார மற்றும் நடமாடும் முகாம் நடாத்தப்பட்டது -செப்டெம்பர் 28 ஆம் திகதி அநுராதபுரத்தில் சுகாதார வைத்திய முகாம்

## 06. கலை மற்றும் கலாச்சார நிகழ்ச்சி



*சமுதாயத்தின் பல்வேறு பிரிவுகளின் மத்தியில் கலை நிகழ்சிகள் (படப்பிடிப்பு, நாடகங்கள், இசை, ஓவியம், கார்ட்டூன் போன்றவை), தெரிவுசெய்யப்பட்ட மத திருவிழாக்கள் மற்றும் கலாச்சார நிகழ்வுகளின் கொண்டாட்டம்என்பவற்றின் மூலமாக சமுதாய ஒற்றுமை, பரஸ்பர புரிதல் மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றை வளர்ப்பதே இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான முக்கியத்துவமாகும். கலை நிகழ்ச்சி முதலிய கலை மற்றும் பண்பாடு துறையில் நமது சமுதாயத்தின் பல்வேறு பிரிவினருக்கு மத்தியில் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்காக, மதத் தலைவர்கள் பல்வேறு மதங்கள் மற்றும் பல்வேறு கலாச்சாரங்களின் மாணவர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோரின் பங்கேற்புடன் கூட்டு அணுகுமுறை அடிப்படையில் குறிப்பாக, கலாச்சார மற்றும் மத திருவிழாக்களின் கொண்டாட்டமே இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான முக்கியத்துவமாகும்*

- நாட்டின் 232,920 மாணவர்களின் பங்களிப்புடன் தை பொங்கல், சிங்கள தமிழ் புத்தாண்டு,ரம்லான், பொசன் போயா, கிறிஸ்மஸ் பண்டிகைகள் என்பவற்றுக்கு 440 பல கலாச்சார மற்றும் மத கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டன.
- மத மற்றும் கலாச்சார திருவிழாக்களை கூட்டாக கொண்டாடும் கையேடு முடிக்கப்பட்டது
- தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் பற்றிய கார்ட்டூன் கண்காட்சி பிஎம்ஐசிஎஹ் இல் நடைபெற்றது
- ஓஎன்ஆர் ஆல் தயாரிக்கப்பட்ட துண்டெனெக் திரைப்படமானது திரையிடப்பட்டதுடன் 13 காட்சிகள் மற்றும் கலந்துரையாடல்கள் நிறைவு செய்யப்பட்டன.
- ஓஎன்ஆர் ஆல் தயாரிக்கப்பட்டவானொலி நாடகம் (11 அத்தியாயங்கள்) ஒளிபரப்பப்பட்டது.
- நல்லிணக்கத்தை மையப்படுத்திய "ஜனகரிலிய" வீதி நாடகத்தின் 22 காட்சிகள் மற்றும் கலந்துரையாடல்கள் நிறைவு செய்யப்பட்ட
-





## 07. உளவியல் உதவி

பொதுமக்கள் மற்றும் தீவிரமான மன உளைச்சலுடனான படைவீரர்களை முரண்பாடுகள் அம்பலப்படுத்துகின்றன, நீண்ட கால கஷ்டம் மற்றும் மன அழுத்தம் ஆகியவற்றின் இறுதிக்கட்ட விளைவு பேரதிர்ச்சி மன வேதனையாகும் .பேரதிர்ச்சி மன வேதனையை உருவாக்கும் பல காரணிகளில் ஆயுத மோதல்கள் முக்கியமானவை.அர்த்தமுள்ள பொருளாதார மற்றும் சமூக வாழ்வில் ஈடுபடுவதற்கான ஒரு நபரின் திறனை பேரதிர்ச்சி மன வேதனை பாதிக்கிறது.



நாட்டின் 30 ஆண்டுகால மோதல் சூழலில்,பல ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்ட நிலையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பேரதிர்ச்சி மன வேதனைக்கு உள்ளான உயிர்களை 'இயல்புநிலைக்கு' மீட்டெடுப்பதற்காக உளவியல் உதவித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அ) பணிக்குழுவை நிறுவுவதன் மூலம் மோதலால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு அவசர மனோவியல் -சமூக சேவைகளை வழங்குவதற்கு உதவுதல். (உடனடி உளவியல்-சமூக உதவி ஏற்பாட்டுக்கான ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல் பணிக்குழுவின் முக்கிய கடமையாகும்)

(ஆ) உளவியல்-சமூக தேவைகளை பேசுவதற்கு நீண்டகால உத்திகளை உருவாக்குதல்.


*அடைவு :*



- *உளவியல் சமூக ஆலோசனைக் குழுவிற்கான பணிக்குழு முடிக்கப்பட்டுள்ளது.*
- *மனநலம் மற்றும் உளவியல்-சமூக உதவிக்கான ஒருங்கிணைப்பு வழிமுறைகள்தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன.*
- *மன நல மற்றும் உளவியல் நலம் தொடர்பிலான பயிற்சியாளர்களின் பயிற்சிநெறி (75உறுப்பினர்கள் (30 அரச நிறுவனங்கள் 45 அரச சார்பற்ற ஊழியர்கள்) பயிற்சி பெற்றார்கள்)*
- *பல்வேறு பயிற்சி அமர்வுகள் / கருத்தரங்குகள்/ விழிப்புணர்வு அமர்வுகளை நடாத்துதல் (மாவட்டத்திற்கு 6 என்ற அளவில் சமுதாய கருத்தரங்குகள்*

## 08. பொதுமக்கள் விழிப்புணர்வு மற்றும் மற்றவர்களுக்கு கொண்டு செல்லல்

**நோக்கம்:**




*பல்வேறு அமைச்சுக்கள், முகவர்கள் மற்றும் சமூகத்தின் பல்வேறு பிரிவினருடன் தேசிய அமைதி மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்காக தொடர்பாடல் உத்திகள் மற்றும் பொதுமக்களது ஈடுபாடுகளைப் பயன்படுத்துவதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.*

*அடைவு :*

- ONUR *ற்கான உத்தியோகபூர்வ இணையதளம் மீண்டும் தொடங்கப்பட்டது; www.onur.gov.lk.*
- *ட்விட்டர் மற்றும் ஃபேஸ்புக்கில்* ( Face Book & Twitter ) *உத்தியோகபூர்வமாக சமூக ஊடக தளங்கள் உருவாக்கப்பட்டன .*
- ONUR *இன் உத்தியோகபூர்வ செய்தி பிரசுரமாக வெளியிடப்பட்ட "சமாஜிய" வெளியானது.*
- ONUR *செயல்பாடுகள் பற்றய ஊடக அறிக்கைகள் மற்றும் ஊடகங்களுக்கான வெளியீடுகள்.*
- *நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்துவதற்காக பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுடனான கல்வி பற்றிய ஆவணப்படம் தயாரித்தல்.*
- *வடக்கின் 'அம்மாச்சி' திட்டத்தின் பயனாளிகள், மழைநீர் சேகரிப்பு திட்டத்தின் பயனாளிகள் மற்றும் 'சகோதர பாடசாலை ' திட்டத்தின் பயனாளிகளின் நற்சான்று வீடியோக்கள்.*
- *'துண்டெனெக் ' (*Thundenek *)படத்தின் ஊக்குவிப்பு மற்றும் விளம்பர பிரச்சாரம் முடிந்தது*
- *குறும் திரைப்பட போட்டி விளம்பரப்படுத்தப்பட்டது*
- ONUR *நடவடிக்கைகளுக்கான ஆவணப்படம் தயாரிக்கப்பட்டது*

*நிகழ்ச்சிக்கான ஒதுக்கீடு 50.00 மில்லியன் ரூபாய்கள்*

## 09. நல்லிணக்கத்திற்கான பெண்கள்

எந்தவொரு மோதல் சூழ்நிலையிலும் சமூகத்தின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களாக பெண்களும் குழந்தைகளும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனவே நல்லிணக்க நடவடிக்கைகளில் பெண்களுக்கு சிறப்பு கவனம் செலுத்துவது அவசியம்.

**நோக்கம் :**

வடக்கு கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் உள்ள பெண்கள் தலைமை தாங்கும் வீடுகளின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்தலும் முன்னாள் போராளிகள் உட்பட இளைஞர்களின் திறன் அபிவிருத்தி.



**அடைவு :**

- வணிகரீதியான வீட்டு தோட்ட திட்டங்கள்.

வடக்கு கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் குறிப்பாக பெண்கள் தலைமை தாங்கும் வீடுகளுக்கு வருமானமீட்டும் செயற்பாடுகளாக வணிகரீதியான வீட்டு தோட்ட திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது . 2018 இல், 276 விவசாய கிணறுகள், 247 கால்நடை கொட்டகைகளும் மிருகங்களும் வழங்கப்பட்டதுடன் சுமார் 2000 ஏக்கர் வளர்க்கப்படவேண்டும். இந்த திட்டத்தின் மூலமாக மொத்தமாக 1,650 குடும்பங்கள் பயன்பெறுவதுடன் விவசாயி ஒருவருக்கு சராசரி வருமானமாக ஒரு பருவத்திற்கு ரூபா 45,000.00 எதிர்பார்க்கப்படுகிறது.

- முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதார உதவி

74 முன்னாள் போராளிகள் இந்த திட்டத்திலிருந்து பயனடைவார்கள் . மீன்பிடி உபகரணங்கள், தச்சு மற்றும் வெல்டிங் கருவிகள் மற்றும் விவசாய உபகரணங்கள் ஆகியவை அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் வழங்கப்பட்டுள்ளன . கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் மூலம் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.



- போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாடசாலை மாணவர்களுக்குத் திறன்களை மேம்படுத்தும் வசதிகள்.

இந்த திட்டத்தின் கீழ் கணினி உபகரணங்கள் அம்பாறையில் உள்ள தொழில் பயிற்சி நிலையத்திற்கு புதிய கணணி ஆய்வுகூடத்தை உருவாக்கிஅம்பாறை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் உள்ள பாடசாலை படிப்பை முடித்தவர்கள் புதிய கிராபிக் வடிவமைப்பு பயிற்சிநெறியை ஆரம்பிப்பதற்கு வழங்கப்பட்டுள்ளன. 20 கணினிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டு 30 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.



## 10. மழைநீர் சேகரிப்புத் திட்டம் (RWH)

*இந்த திட்டத்தின் நோக்கம் யாழ்ப்பாண குடாநாட்டின் கடுமையான குடிநீர் பற்றாக்குறைக்கு இடைக்கால தீர்வாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 3000 மழைநீர் சேமிப்பு அலகுகளை நிர்மாணித்தலாகும்.*



**அடைவு :**

*120 மழைநீர் சேமிப்பு அலகுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன*

## 11. சிறு நீர்ப்பாசன மேம்பாட்டுத் திட்டம்



*வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கைவிடப்பட்ட 125 சிறிய நீர்ப்பாசனங்களை அபிவிருத்தி செய்வதன் ஊடக வாழ்வாதார உதவிகளை வழங்குவதன் மூலமாக விவசாய சமூகத்திற்குள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.*

**அடைவு :**

- *வடக்கு கிழக்கு மாகாணங்களில் 107 நீர்ப்பாசன முறைமைகள் பூர்த்தி செய்யப்பட்டன*

## 12. பொருளாதார ஈடுபாட்டுத் திட்டம்

*பிராந்திய அபிவிருத்திக்கான இடைவெளியை குறைக்கும் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதுடன் நேரடியாக தொடர்புபடும் அடிப்படை மற்றும் முன்னுரிமை உள்கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதன் மூலம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பொருளாதார ஈடுபாட்டு திறனை அபிவிருத்தி செய்வது இந்த வேலைத்திட்டத்தின் பிரதான நோக்கம் ஆகும் .*



**அடைவு :**

- *இத்திட்டங்களின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முன்னுரிமை உட்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. 355838 பயனாளிகளுக்கு உதவுவதற்காக 165 உப திட்டங்களுக்கு 355.85 மில்லியன் ரூபாயை ஒஎன்யூஆர் ஒதுக்கியுள்ளது .*
- *ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்திச் திட்டம் வட மாகாணத்தின் உரிய மாவட்டச் செயலாளர் மூலமாக ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் தெரிவு*




*செய்யப்பட்டுள்ள 44 கிராம சேவகர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது .306.13 மில்லியன் ரூபாய் 119 உதவித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை 115 திட்டங்கள் முடிவடைந்துள்ளன . இந்த திட்டத்தின் கீழ் 35,880 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.*

- *அம்பாறை ,மொனராகல,அனுராதபுர மாவட்டங்களில் உள்ள முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட கிராமத்தின் செயற்திட்டத்திற்கு ஓஎன்யூஆர் நிதியுதவி வழங்கியுள்ளது. 34 உதவித் திட்டங்களுக்காக 88.40 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை 28 திட்டங்கள் முடிவடைந்துள்ளன. இந்த திட்டத்தின் கீழ் 7,184 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.*
- *கிராமிய அடிப்படையிலான கைத்தொழில் அபிவிருத்தி கடன் திட்டத்திற்கான வட்டி செலுத்த 159 பயனாளர்களுக்கு வெற்றிகரமாக தமது கடன்களை திருப்பிச் செலுத்துவதற்காக 2.70 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது .*

செயற்திட்டத்தின் படியான செயலாற்றுகை

தேசிய ஒருமைப்பாட்டிற்கும், நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் நிதி முன்னேற்றம்




| தொ. இல | விபரம் | உத்தேசிக்கப்பட்ட தொகை (ரூபா) | உண்மைச் செலவு (ரூபா) | விகிதம் |
|---|---|---|---|---|
| **01** | தேசிய நல்லிணக்க கொள்கை | 0.3 | 0.3 | 100.00% |
| **02** | சமூக ஒத்துழைப்புக்கான கல்வி | 57 | 4.98 | 8.74% |
| **03** | இன நல்லிணக்க உரையாடல் | 100 | 17.41 | 17.41% |
| **04** | கலை மற்றும் கலாச்சார நிகழ்ச்சி | 72 | 44.82 | 62.25% |
| **05** | உளவியல் உதவி | 39 | 9.57 | 24.54% |
| **06** | பொதுமக்கள் விழிப்புணர்வு மற்றும் மற்றவர்களுக்கு கொண்டு செல்லல் | 50 | 9.6 | 19.20% |
| **07** | நல்லிணக்கத்திற்கான பெண்கள் | 90 | 57.12 | 63.47% |
| **08** | மழைநீர் சேகரிப்புத் திட்டம் | 25 | 3.38 | 13.52% |
| **09** | சிறு நீர்ப்பாசன மேம்பாட்டுத் திட்டம் | 500 | 226.43 | 45.29% |
| **10** | பொருளாதார ஈடுபாட்டுத் திட்டம் | 951.7 | 699.18 | 73.47% |
| | மொத்தம் | **1885** | **1072.79** | **56.91%** |

# 09.இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்

**அறிமுகம்**

இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம் இலங்கையில் இந்துசமய கலாச்சாரத்தை மேம்படுத்தல்இ பெருக்குதல்இ பேணிப்பாதுகாத்தல் போன்ற 01ஆம் திகதி ஜனவரி 1986 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. தற்போது தேசிய சகவாழ்வு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, மற்றும் இந்து சமய விவகார அமைச்சின் கீழ் பணியாற்றப்படுகின்றது.

**தொலைநோக்கு**

இலங்கையில் இந்து சமயத்தையும் கலாச்சாரத்தையும் பேணிப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல்

**செயற்பணி**

இந்துசமய, இந்து கலாச்சார, கலைமற்றும் இந்து சமய கல்வியினை பாதுகாத்தல், ஊக்குவித்தல் மற்றும் பரப்புதல்

## நோக்கங்கள்

அ) இந்துசமய கல்வியினை ஊக்குவித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்

ஆ) இந்துசமய நடவடிக்கைகளை ஊக்குவித்தல்

இ) இந்துசமய மற்றும் இந்து கலாச்சாரம் பற்றிய ஆய்வு நடாத்தல்

ஈ) இந்து கலாச்சாரம் மற்றும் கலையினை ஊக்குவித்தல்

## முக்கிய பணிகள்

- ✓ அறநெறி பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல்
- ✓ இந்து குருக்களுக்கு பயிற்சி வழங்கல்
- ✓ இந்து கோவில்களை புனரமைத்தல்
- ✓ இந்து ஆராய்ச்சி நூலத்தின் நிர்வாகம்
- ✓ கதிர்காம இந்து பக்கதர்களின் ஓய்வு நிர்வாகம்
- ✓ மட்டக்களப்பு இந்து கலாச்சார மையத்தின் நிர்வாகம்
- ✓ ஆனிப்பண்டி குருகுல மையத்தின் நிர்வாகம்
- ✓ யாழ்ப்பாண நாவலர் மணி மண்டப நிர்வாகம்
- ✓ இந்து மற்றும் தமிழ் கலாச்சாரம் பற்றிய ஆய்வினை நடாத்தல்
- ✓ இந்து கலைக்களஞ்சியத்தை தொகுத்தல்
- ✓ இந்து கலாச்சார மற்றும் கலைகளை பாதுகாத்தல்
- ✓ இந்து பண்டிகைகள் மூலம் பாரம்பரியத்தை பாதுகாத்தல்
- ✓ இந்து கலாச்சார நிதியச்சட்டத்தின் விதிகளை நடைமுறைப்படுத்தல்

| இல | செயற்திட்டம் | செயற்பாடு | பயனாளிகள் | பௌதீக முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| 01 | அறநெறி பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல் | அறநெறி ஆசிரியர்களின் கற்பித்தல் நுட்பங்களை மேம்படுத்தலுக்கான அடிப்படை பயிற்சி | 3000 பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் | 100 % |
| | | அறநெறி ஆசிரியர்களுக்கு கற்பித்தல் நுட்பங்களை மேம்படுத்தலுக்கான சான்றிதழ் பாடநெறி | 450 பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் | 100 % |
| | | அறநெறி ஆசிரியர்களுக்கு கற்பித்தல் நுட்பங்களை மேம்படுத்தலுக்கான டிப்ளோமா பாடநெறி | 150 பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் | 100 % |
| | | இந்துசமய அறிவினை மேம்படுத்தும் அடிப்படை பாடநெறி | 500 பயிற்றப்பட்ட பொதுமக்கள் | 100 % |
| | | இந்துசமய அறிவினை மேம்படுத்தும் உயர் பாடநெறி | 500 பயிற்றப்பட்ட பொதுமக்கள் | 100 % |
| | | அறநெறி மாணவர்களுக்கு பண்ணிசை மற்றும் யோக பயிற்சியினை நடாத்தல் | 3000 மாணவர்கள் | 100 % |
| | | தேசிய படைப்பாற்றல் மதிப்பீடு மற்றும் விருது நடாத்தல் | 100, 000 மாணவர்கள் | 100 % |
| | | அறநெறி மாணவர்களுக்கு இந்து சமய புத்தகங்களை வாங்குதல் மற்றும் விநியோகித்தல். | 10,000 மாணவர்கள் | 100 % |
| | | அறநெறி மாணவர்களுக்கு இந்து சமய புத்தகங்களை அச்சிடுதல் மற்றும் விநியோகித்தல். | 100,000 மாணவர்கள் | 100 % |
| | | அறநெறி பாடசாலைக்கு இசைக்கருவிகள் வாங்குதல் மற்றும் விநியோகித்தல் | 100 அறநெறி பாடசாலைகள் | 100 % |
| | | அறநெறி மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி நடாத்தல் | 1000 இந்து இளைஞர் | 100 % |
| | | தெய்வீக அன்பு குழந்தைகள் திட்டம் நடாத்தல் | 5000 மாணவர்கள் | 100 % |
| | | தேசிய சேவை சிறப்பு மதிப்பீடு மற்றும் விருது நடாத்தல் | 1000 பாடசாலைகள்/ 2000 ஆசிரியர்கள் | 100 % |
| | | இந்து அறநெறி பாடசாலைகள் கட்டிடம் கட்டுவதற்கான நிதி உதவி | 10 பாடசாலைகள் | 100 % |
| | | இந்து அறநெறி பாடசாலைகளுக்கான தளப்பாடங்களை வாங்குவதற்கான நிதி உதவி | 50 பாடசாலைகள் | 100 % |
| | | அறநெறி ஆசிரியர்கள்/ மாணவர்கயளுக்கான சீருடை துணிகளை வாங்குதல் மற்றும் விநியோகித்தல் | அறநெறி பாடசாலைகள் ஆசிரியர்கள்/ மாணவர்கயளுக | 100 % |
| | | அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கான நூலக புத்தகத்திற்கான கொடுப்பனவு | 5000 ஆசிரியர்கள் | 100 % |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அறநெறி ஆசிரியர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு | 5000 ஆசிரியர்கள் | 100 % |
| 02 | இந்து சமய மற்றும் கலாச்சார ஊக்குவிப்பு | **ஆன்மீக விழிப்புணர்வு பற்றிய அடிப்படை மற்றும் உயர்மட்டப் பயிற்சி** | 60 பிரசங்கிகள் | 100 % |
| | | இந்து புனிதர்களின் குரு பூஜைகள் நடாத்தல் | 12 குரு பூஜைகள் | 100 % |
| | | தெய்விக கிராம திட்டத்தினை நடாத்தல் | 4200 பயனடைந்த அறநெறி மாணவர்கள்/ இந்து பொது பாடசாலை மாணவர்கள் | 100 % |
| | | அனைத்து இந்து சமய விழாக்களையும் நடாத்தல் | 2500 பயனடைந்த அறநெறி மாணவர்கள் / இந்து பொது மக்கள் | 100 % |
| | | ஆன்மீக மற்றும் கலாச்சார முன்னேற்றம் பற்றிய அடிப்படை பயிற்சி | 2000 பயனடைந்த மாணவர்கள்/ பொது மக்கள் | 100 % |
| | | ஏனைய இந்து சமய நடவடிக்கைகளை நடாத்தல் | 4000 பயனடைந்த மாணவர்கள்/ பொது மக்கள் | 100 % |
| | | சமய சகவாழ்வு திட்டம் | விஷேட நடவடிக்கைகள் | 100 % |
| 03 | இந்து சமயம் மற்றும் கலாச்சாரம் பற்றிய ஆய்வு | இந்து பஞ்சாங்க டைரியை அச்சிடுதல் மற்றும் விநியோகித்தல் | 5,000 பிரதிகள் | 100 % |
| | | இந்து இதழ் அச்சிடுதல் மற்றும் விநியோகித்தல் (பண்பாடு மற்றும் கோபுரம்) | 2000 பிரதிகள் | 100 % |
| | | அரிய இந்து சமய புத்தகங்களை அச்சிடுதல் மற்றும் விற்பனை செய்தல் | 2500 பிரதிகள் | 100 % |
| | | இந்து ஆராய்ச்சி கருத்தரங்கு நடாத்தல் (4வது சர்வதேச முருக மாநாடு மற்றும் 3வது சர்வதேச இந்து மத மாநாட்டின் தொடக்கப் பணிகள்) | 5000 பயனடைந்த மாணவர்கள்/ பொது மக்கள் | 100 % |
| | | கலந்துரையாடல் மற்றும் ஆராய்ச்சி கூட்டங்கள் | 10 கூட்டங்கள் | 100 % |
| | | சமஸ்கிருத அடிப்படை மற்றும் உயர் பயிற்சிகளை நடாத்தல் | 100 மாணவர்கள் | |
| 04 | இந்து சமயம் தமிழ் கலை மற்றும் கலாச்சாரம் | நாட்டுப்புற கலைப் பட்டறை, செயல்திறன் மற்றும் விருது நடாத்தல் | 200 பயனடைந்த கலைஞர்கள் | 100 % |
| | | கலைஞர்களின் கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் விருது நடாத்தல் | 70 பயனடைந்த கலைஞர்கள் | 100 % |
| | | கல்வெட்டியல் பற்றிய அடிப்படை மற்றும் உயர் பயிற்சி<br><br>இலங்கை ஆசிரியர்களிடமிருந்து இந்து | 100 பல்கலைக்கழக மாணவர்கள் | 100 % |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தமிழ் புத்தகங்களை வாங்குதல் | 50 எழுத்தாளர்கள் | 100 % |
| 05 | இந்து ஆலயங்கள் மற்றும் இந்து நிறுவனங்களை அபிவிருத்தி செய்தல் | **மூலதன ஒதுக்கீட்டில் நிதி உதவி** | | |
| | | வடக்கு கோயில்களின் புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுக்கான நிதி உதவி | 100 கோயில்கள் | 100 % |
| | | கிழக்கு கோயில்களின் புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுக்கான நிதி உதவி | 65 கோயில்கள் | 100 % |
| | | வடக்கு கிழக்கு தவிர்த வேறு கோயில்களின் புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுக்கான நிதி உதவி | 65 கோயில்கள் | 100 % |
| | | இந்து கோவில்களின் உட்கட்டமைப்புக்கான நிதி உதவி | 200 கோயில்கள் | 100 % |
| | | இந்து சிறுவர்களின் கல்விக்கான நிதி உதவி | 1600 இந்து சிறுவர்கள் | 100 % |
| | | இந்து கோவில்கள் மற்றும் நிறுவனங்களுக்கான நிதி உதவி | 32 இந்து கோவில்கள் மற்றும் நிறுவனங்கள் | 100 % |
| | | நந்திக் கொடிகளை அச்சிடுதல் மற்றும் வழங்கல். | 12000 கொடிகள் | 100 % |
| | | தெய்வீக சேவை திட்டத்தினை நடாத்தல் | 10 பயனடைந்த இந்து நிறுவனங்கள் | 100 % |
| | | குருக்கள் மற்றும் கோவில் அறகாவலர்களுக்கான அடிப்படை தலைமைத்துவ பயிற்சி | 500 பயனடைந்த குருக்கள் மற்றும் கோவில் அறகாவலர்கள் | |

# 10. வரவு செலவு முன்னேற்றம்

தேசிய சகவாழ்வு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, மற்றும் இந்து சமய விவகார அமைசின் வரவு வெலவு முன்னேற்றம் **(2018.12.31)**

| இல | செயற்திட்டம் | ஒதுக்கீடு | உண்மைச் செலவு | செலுத்த வேண்டிய கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. | மொழி உபயோகம மற்றும் மொழிப்பெயர்ப்பு | 200,000,000.00 | 111,000,000.00 | 20,641,000.00 |
| 2. | கிராமிய நீர்பாசன அபிவிருத்திகருத்திட்டத்தின் கீழ் ஆதரவு செயற்திட்டம் மற்றும் செயற்பாடு மூலம் மழை நீர் தாங்கி வழங்குதல் மற்றும் ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தி | 500,000,000.00 | 221,550,000.00 | |
| 3. | உணவு பதப்படுத்தும் மையங்கள் 02 கிளிநொச்சி மற்றும் நெடுந்தீவில் ஸ்தாபித்தல் | 40,000,000.00 | 14,820,000.00 | 7,660,000.00 |
| 4. | பொருளாதார மையம் யாழ்ப்பாணத்தில் ஸ்தாபித்தல் | 100,000,000.00 | 26,680,000.00 | 73,320,000.00 |
| 5. | நல்லிணக்கத்தினை பலப்படுத்துவதற்கான குறிக்கோளை கொண்ட பொருளாதார அதிகாரம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் | 1,750,000,000 | 963,520,000.00 | 488,226,000.00 |

# 11. நாணய ஒதுக்கீடு

**நிதி அறிக்கை 2018.12.31 வரை**

தலைப்பு - தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சு 157
நிகழ்ச்சித்திட்டம் -01 செயற்பாட்டு நடவடிக்கைகள்
கருத்திட்டம் -01 அமைச்சர் அலுவலகம்

**2018.12.31 வரை**

| வகைகள்/ விபரம் | திருத்தியமைக்கப்பட்ட வரவு செலவு | மொத்தச் செலவு | தற்போதைய நிதி |
|---|---|---|---|
| **புனர்வாழ்வு செலவு** | **38,736,100.00** | **34,419,043.88** | **4,317,056.12** |
| தனிப்பட்ட ஊதியங்கள் | 18,145,000.00 | 16,312,842.00 | 1,832,158.00 |
| போக்குவரத்துச் செலவு | 2,200,000.00 | 2,157,643.36 | 42,356.64 |
| வழங்கல் | 9,141,100.00 | 6,992,507.39 | 2,148,592.61 |
| பராமரிப்புச்செலவு | 5,700,000.00 | 5,413,522.45 | 286,477.55 |
| சேவை | 3,550,000.00 | 3,542,528.68 | 7,471.32 |
| **மூலதனச் செலவு** | 51,900,000.00 | 39,939,703.09 | 11,960,266.91 |
| மூலதனச் சொத்துக்களின் புனர்வாழ்வு | **3,900,000.00** | **2,606,738.93** | **1,293,261.07** |
| மூலதனச் சொத்துக்களை வாங்குதல் | **48,000,000.00** | **37,332,964.16** | **10,667,035.84** |
| **மொத்தம்** | **90,636,100.00** | **74,358,746.97** | **16,277,323.03** |

தலைப்பு - தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சு 157
நிகழ்ச்சித்திட்டம் -01 செயற்பாட்டு நடவடிக்கைகள்
கருத்திட்டம் -02 நிர்வாக மற்றும் தாபன சேவைகள்

**2018.12.31 வரை**

| வகைகள்/ விபரம் | திருத்தியமைக்கப்பட்ட வரவு செலவு | மொத்தச் செலவு | தற்போதைய நிதி |
|---|---|---|---|
| **புனர்வாழ்வு செலவு** | **234,867,000.00** | **220,415,635.96** | **14,451,364.04** |
| தனிப்பட்ட ஊதியங்கள் | 53,700,000.00 | 51,929,303.67 | 1,770,696.33 |
| போக்குவரத்துச் செலவு | 2,120,000.00 | 2,108,700.31 | 11,299.69 |
| வழங்கல் | 10,240,000.00 | 9,893,517.80 | 346,482.20 |
| பராமரிப்புச்செலவு | 8,835,000.00 | 8,608,277.16 | 226,722.84 |

| | | | |
|---|---|---|---|
| சேவை | 66,672,000.00 | 64,929,440.35 | 1,742,559.65 |
| இடமாற்றம் | 93,300,000.00 | 82,946,396.67 | 10,353,603.33 |
| **மூலதனச் செலவு** | **54,818,900.00** | **44,692,091.04** | **10,126,808.96** |
| மூலதனச் சொத்துக்களின் புனர்வாழ்வு மற்றும் விருத்தி செய்தல் | 2,810,000.00 | 2,185,502.50 | 624,497.50 |
| மூலதனச் சொத்துக்களை வாங்குதல் | 2,236,000.00 | 2,209,857.85 | 26,142.15 |
| கொள்வனவு | 1,272,900.00 | 1,272,900.00 | - |
| இடமாற்றம | 48,500,000.00 | 39,023,830.69 | 9,476,169.31 |
| **மொத்தம்** | **289,685,900.00** | **265,107,727.00** | **24,578,173.00** |

தலைப்பு - தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சு 157

நிகழ்ச்சித்திட்டம் -01 செயற்பாட்டு நடவடிக்கைகள்

கருத்திட்டம் -03 நிர்வாக மற்றும் தாபன சேவைகள்

2018.12.31 வரை

| **வகைகள்/ விபரம்** | **திருத்தியமைக்கப்பட்ட வரவு செலவு** | **மொத்தச் செலவு** | **தற்போதைய நிதி** |
|---|---|---|---|
| புனர்வாழ்வு செலவு | **157,910,000.00** | **144,711,167.83** | **13,198,832.17** |
| தனிப்பட்ட ஊதியங்கள் | 144,700,000.00 | 132,791,363.82 | 11,908,636.18 |
| போக்குவரத்துச் செலவு | 5,000,000.00 | 4,414,312.58 | 585,687.42 |
| வழங்கல் | 2,550,000.00 | 2,138,634.64 | 411,365.36 |
| பராமரிப்புச்செலவு | 700,000.00 | 684,237.50 | 15,762.50 |
| சேவை | 4,160,000.00 | 3,938,262.10 | 221,737.90 |
| இடமாற்றம் | 800,000.00 | 744,357.19 | 55,642.81 |
| மூலதனச் செலவு | **367,500,000.00** | **261,264,620.91** | **106,235,379.09** |
| மூலதனச் சொத்துக்களின் புனர்வாழ்வு மற்றும் விருத்தி செய்தல் | 600,000.00 | | 600,000.00 |
| மூலதனச் சொத்துக்களை வாங்குதல் | 3,400,000.00 | 1,123,920.80 | 2,276,079.20 |
| கொள்வனவு | 500,000.00 | 420,258.60 | 79,741.40 |
| முதலீடுகள் | 363,000,000.00 | 259,720,441.51 | 103,279,558.49 |
| **மொத்தம்** | **525,410,000.00** | **405,975,788.74** | **119,434,211.26** |

# 12. முற்பணக் கணக்கு

**குறித்துரைக்கப்பட்ட வரையரைக்கு எதிரான முன்பணக் கணக்கின் உண்மைத் தொகை**

முன்பணக் கணக்கு செயற்பாடுகள் பின்வருமாறு 31.12.2018

| | | |
|---|---|---|
| 01. | அதிகபட்ச செலவு வரையரை | ரூ.18,000,000.00 |
| | உண்மைச் செலவு (157011) | ரூ.17,503,826.41 |
| 02. | அதிகபட்ச கடன் வரையரை | ரூ.7,000,000.00 |
| | உண்மை வரவு (157011) | ரூ.10,053,873.50 |
| 03. | அதிகபட்ச பற்று வரையரை | ரூ.60,000,000.00 |
| | உண்மை மிகுதி | ரூ.46,392,571.80 |

# 13. விமர்சனம்

நாட்டின் சகவாழ்வு மறுமலர்ச்சி செய்தல் மற்றும் அரசகரும மொழிக் கொள்கை முறையாக அமுல்ப்படுத்தலுக்கு எமது அமைச்சின் உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பை நான் பாராட்டுகிறேன். அத்தோடு இதற்கு பொறுப்பான கௌரவ அமைச்சர் மனோ கணேஷன் அவர்களால் வழங்கப்படுகின்ற ஆலோசனைகள் மற்றும் வழிக்காட்டுதலில் எமது அமைச்சின் செயல்திறன் அதிகரிக்க பங்களிப்பு வழங்கியமையை நினைவுகூறி மகிழ்ச்சியடைகிறேன். அமைச்சின் அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பை இத்தருனத்தில் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

எம்.வை.எஸ். தேசப்பிரிய
செயலாளர்
தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சு.